# தமிழர் பொருளியம்


வாரமலர் TAMILS ECONOMY

விலை - 100/= இதழ் - 86 01.12.2024

# கேணல் சாண்டர்ஸின்- KFC சிக்கன் உருவான கதை







இலங்கை நாணயத்தின் வரலாறு 04


பழந்தமிழரின் பயிர்ப்பாதுகாப்பு முறைகள் 16


மழைக் காலமும் கால்நடை வளர்ப்பும்; 17


பொருளாதாரம் | சுற்றுலாத்துறை | வணிகம் | தொழில் முனைவு | விவசாயம்

# கேணல் சாண்டர்ஸின்- KFC சிக்கன் உருவான கதை




கேணல் சாண்டர்ஸ் தன்னுடைய கென்டகி ஃபிரைடு சிக்கன் (Kentucky Fried Chicken) கடையை உலகின் மூலை முடுக்கெல்லாம் திறந்தவர்.

1009 முறை விடாமுயற்சி

கேணல் சாண்டர்ஸின் KFC சிக்கன் உரிமையை முதன் முதலில் விற்றபோது அவருக்கு வயது 65. இந்த முதல் வெற்றி பெறுவதற்கு முன்பு 1009 முறை, உணவகங்களால் KFC சிக்கன் உரிமை (franchise) தேவையில்லை என்று சொல்லப்பட்டு நிராகரிக்கப்பட்டவர். இரண்டு குக்கர், மாவு, மசாலா கலவைகள் போன்றவைகளை அவரின் காரில் எடுத்துச்சென்று ஊருராக சுற்றித்திரிந்து ஒவ்வொரு உணவகமாகசென்று அவரின் சிக்கன் செய்யும்முறையை விளக்கி விற்பனை செய்ய முயன்றார்.

ஆனால் அவரின் KFC சிக்கனை விற்பனை செய்ய யாரும் தயாராகவில்லை. அவர் 1009 முறை நிராகரிப்புகளையே சந்தித்தார். 1009 முறை விடாமுயற்சிக்கு பிறகு ஒரு உணவகத்திடம் KFC சிக்கன் உரிமையை விற்றார். KFC சிக்கன் சுவையில் மக்கள் மயங்கியதால் உணவகத்தின் எண்ணிக்கை அதிகமானது.

### பல தோல்விகளை சந்தித்த சாண்டர்ஸ்

உங்களுக்கு KFC துரித உணவுகள் பிடிகுக்மோ பிடிக்காதோ ஆனால் கேணல் ஹார்லாந்து சாண்டர்ஸ்(Colonel Harland Sanders) கதை உங்களுக்கு நிச்சயம் பிடித்தனமானதாகவே இருக்கும். அவரின் பயணம் எல்லோருக்கும் வெற்றிக்கான தூண்டுதலையே கொடுக்கும். விடாமுயற்சி, அர்ப்பணிப்பு மற்றும் கடின உழைப்பு ஆகியவை இணைந்தால் எந்த வயதிலும் வெற்றியை உருவாக்க முடியும் என்பதை அவரின் வாழ்க்கை பயணம் சொல்லுகிறது.

ஹார்லாண்ட் டேவிட் சாண்டர்ஸ் செப்டம்பர் 9, 1890ஆம் ஆண்டு அமெரிக்காவின் இந்தியானாவில் உள்ள ஹென்றிவில்லில் பிறந்தார். அவரது ஆரம்பகால வாழ்க்கை சோகங்களால் நிறைந்தது. ஐந்து வயதாக இருந்தபோது அவரது தந்தை இறந்துவிட்டார்.

குடும்ப சூழல் காரணமாக தக்காளி விவசாய பண்ணைக்கு தாய் சென்றதால், தனது 7 வயதிற்கு மேல் உடன்பிறப்புகளை கவனித்துக் கொள்ளவும் சமைக்கவும் கற்றுக்கொண்டார். ரொட்டி மாவை தயார் செய்தல், காய்கறி மற்றும் இறைச்சிகளை நறுக்கக் கற்றுக் கொண்டார்.

அவரது தாய் மறுமணம் செய்து கொண்ட நிலையில் தனது 10 வயதில் பண்ணைக்கு செல்ல வேண்டிய நிலைக்கு சாண்டர்ஸ் தள்ளப்பட்டார். ரயில்வே ஊழியர், தீயணைப்பு வீரர், நீராவின் எஞ்சின் ஸ்டோக்கர், காப்பீடு விற்பனையாளர், பெட்ரோல் பங்க் ஆபரேட்டர் என பல வேலைகளை செய்தபோதிலும் வாழ்க்கையில் அவரால் வசந்தத்தை எட்டிப்பிடிக்க முடியவில்லை. கடும் வேலைப்பளுவுக்கு மத்தியிலும் சமையல் மீது அவருக்கு தனி ஆர்வம் இருந்து வந்தது

### சாலையோர உணவகம்

1930ஆம் ஆண்டில் அமெரிக்காவில் கடும் பொருளாதார மந்த நிலை நிலவிய காலத்தில் தனது 40ஆவது வயதில், சாண்டர்ஸ் கென்டக்கியில் உள்ள வடக்கு கார்பின் பகுதியில் தனது சாலையோர உணவகத்தை தொடங்கினார்.

11 வகையான மூலிகைகள் மற்றும் மசாலாப் பொருள்களின் இரகசிய கலவையுடன் சமைக்கப்பட்ட வறுத்த கோழிக்காக அவரது உணவகம் அமெரிக்கர்களிடையே பிரபலமானது. அவரது சுவையான வறுத்த கோழியின் தேவை அதிகரித்து, மக்கள் மத்தியில் பிரபலமாக தொடங்கியது.

சாண்டர்ஸின் சிக்கன் செய்முறை உள்நாட்டில் புகழ் பெற்றது, மேலும் 1952ஆம் ஆண்டு கென்டக்கி மாகான ஆளுநரால் அவருக்கு “கர்னல்” என்ற கௌரவப் பட்டம் வழங்கப்பட்டது. இன்று நமக்குத் தெரிந்த கர்னல் சாண்டர்ஸ் ஆளுமையின் ஆரம்பம் இதுதான். 1955 வாக்கில், சாண்டர்ஸ் பிரஷர்-சமைக்கும் கோழியின் தனித்துவமான முறையை முழுமையாக்கினார், இது இறைச்சியின் சுவை மற்றும் ஈரப்பதத்தைப் பாதுகாக்கும் அதே வேளையில் சமையல் நேரத்தை வெகுவாகக் குறைத்தது.

சமையல் கண்டுபிடிப்புக்கான சாத்தியக்கூறுகளை உணர்ந்து, கர்னல் சாண்டர்ஸ் தனது வறுத்த சிக்கன் தயாரிப்பதற்கான செய்முறையை கிளை



உரிமம் (franchising) மூலம் விரிவாக்கத் தொடங்கினார்.

அமெரிக்கா முழுவதும் பயணம் செய்தார், ப்ராஞ்சைஸ் எடுக்க சாத்தியமான நபர்களின் கதவுகளைத் தட்டினார், அவர்களுக்கு ஒப்பந்தங்களை வழங்கினார், அதில் அவரது இரகசிய மசாலா கலவை, சமையல் உபகரணங்கள் மற்றும் அவரது சமையல் முறைகளில் பயிற்சி ஆகியவற்றை அளித்தார்.

### நிலைத்தன்மையின் போராட்டங்கள்

கே.எஃப்.சி. நிறுவனத்தின் விரிவாக்கத்திற்காக தொடக்க காலங்களில் சாண்டர்ஸ் எடுத்த முயற்சிகள் அவ்வளவு எளிதானதாக இல்லை. அவர் பல நிராகரிப்புகளையும், நிதிப் போராட்டங்களையும் எதிர்கொண்டார், சில சமயங்களில் அவரது காரில் தூங்க வேண்டியிருந்தது. அவர் இந்த காலகட்டத்தை “கர்னலின் கடினமான ஆண்டுகள்” என்று அடிக்கடி குறிப்பிடுகிறார். இந்த பின்னடைவுகள் இருந்தபோதிலும், அவர் KFC மீதான தனது பார்வையை இழக்கவில்லை.

### திருப்புமுனை மற்றும் உலகளாவிய விரிவாக்கம்

1964 ஆம் ஆண்டில், கர்னல் சாண்டர்ஸ் KFC நிறுவனத்தை முதலீட்டாளர்கள் குழுவிற்கு 2 மில்லியன் டாலர்களுக்கு விற்றார், இருப்பினும் அந்நிறுவனத்தின் விளம்பர தூதராக இருந்தார். இந்த நடவடிக்கை KFC என்ற துரித உணவுச் சங்கிலியை விரைவான உலகளாவிய விரிவாக்கத்திற்கு நகர்த்த அனுமதித்தது. இன்று, அது 145 நாடுகளில் உலகின் மிகப்பெரிய துரித உணவு சங்கிலி நிறுவனங்களில் ஒன்றாக செயல்பட்டு வருகிறது.

கர்னல் சாண்டர்ஸ் தொலைக்காட்சி விளம்பரங்கள் மூலம் KFC பிராண்டை தொடர்ந்து விளம்பரப்படுத்தினார், அவரது வெள்ளை உடை மற்றும் கருப்பு டை உலகெங்கிலும் உள்ள திரைகளில் நன்கு தெரிந்த நபராக மாற்றியது. அவரது நாட்டுப்புற வசீகரம் மற்றும் நகைச்சுவையான ஆளுமை அவரை மில்லியன் கணக்கானவர்களுக்கு பிடித்தது.

### இறுதிக் காலம்

இருப்பினும் பிற்காலங்களில் KFC நிறுவனத்தை வாங்கியவர்கள் முறையாக தரமான உணவுகளை தருவதில்லை என சாண்டர்ஸ் மீது குற்றச்சாட்டுக்களை வைத்திருந்தனர். ஜூன் 1980ஆம் ஆண்டு சாண்டர்ஸுக்கு கடுமையான லுகேமியா இருப்பது கண்டறியப்பட்டது. அதே ஆண்டு டிசம்பர் 16 அன்று, 90 வயதில் லூயிஸ்வில்லே யூத மருத்துவமனையில் கர்னல் சாண்டர்ஸ் இறந்தார்.

அவர் முதல் பாதி வாழ்க்கையில் ஒரு வேலையிலிருந்து இன்னொரு வேலை என மாறி மாறி செய்தார். நீராவி இரயில் என்ஜினில் எரிபொருள் நிரப்புதல், காப்பீடு விற்பனை, விளக்குகளை உருவாக்குதல், டயர்கள் விற்பனை மற்றும் படகு ஓட்டுனர் போன்ற பல வேலைகளை செய்தார்.

1930 இல் 40 வயது இருக்கும்போது முநவெரஉமல பகுதியில் Shell Oil நிறுவனத்தின் உணவகத்தை எடுத்து நடத்தினார். அப்பொழுதுதான் பல மூலிகைகள் மற்றும் மசாலாக்களுடன் சமைக்கப்பட்ட Kentucky Fried Chicken (KFC) சிக்கனை தயாரித்தார். 1956 இல் 105 டாலர்கள் ஓய்வூதியமாக பெற்று அதிலிருந்து விலகினார்.

KFC சிக்கன் உரிமையை உணவகத்திற்கு விற்க முடிவு செய்து, 2 ஆண்டுகள் 1009 முறை நிராகரிப்பிற்கு பிறகு KFC சிக்கன் உரிமையை ஒரு உணவகத்திற்கு விற்றார்.

9 வருடங்களுக்குள் 600 உணவகத்தை KFC தொடங்கியது. 1965 யில் Brown என்பவருக்கு $2 மில்லியன் டாலர் தொகைக்கு KFC நிறுவனத்தை கேணல் சாண்டர்ஸ் விற்றார்.

1980 சாண்டர்ஸ் இறக்கும் வரை 2.5 இலட்சம் மைல் அவர் பயணம் செய்ததாக Houston பல்கலைகழகம் கூறுகிறது.

Kentucky Fried Chicken (KFC) 123 நாடுகளில் 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட உணவகத்தை கொண்டுள்ளது. McDonald's பிறகு விற்பனை அளவில் உலகின் இரண்டாவது பெரிய சங்கிலி உணவகம் ஆகும்.

நம்பிக்கை, கனவு, விடாமுயற்சி, அர்ப்பணிப்பு மற்றும் கடின உழைப்பு இருந்தால் எந்த வயதிலும் சாதிக்கலாம் என்பதற்கு கேணல் சாண்டர்ஸ் வாழ்க்கை பயணம் ஒரு உதாரணம்.

மின்மடல் : tamilseconomy@gmail.com
தொலைபேசி : 0777304010 / 0702675575

# மேலாண்மை பொருளாதாரம்

பொருளாதாரம் (economy) என்பது நாட்டின் அறியப்பட்ட பொருளாதார அமைப்பையோ இதர நிலப்பகுதியையோ கொண்டுள்ளது. அப்பகுதியின் சமூக ரீதியாக உற்பத்தியில், பரிமாற்றத்தில், விநியோகத்தில் மற்றும் பொருட்கள் மற்றும் சேவைகளின் நுகர்வில் பங்கேற்கும் பொருளாதாரக் காரணிகளையும் கொண்டுள்ளது. ஒரு குறிப்பிட்ட பொருளாதாரம் என்பது அதன் தொழில் நுட்ப பரிணாமம், வரலாறு மற்றும் சமூக நிறுவனம் ஆகியன அடங்கியுள்ள ஒரு வழிமுறையின் இறுதி விளைவுகளையும் அதேபோல அதன் புவியியல், இயற்கை வளக் கொடை மற்றும் சூழல் ஆகியவற்றை முக்கியக் காரணிகளாக உள்ளடக்கியுள்ளது.

இத்தகைய காரணிகள் ஒரு பொருளாதாரம் செயல்படும் இடத்தில் சூழல், உள்ளடக்கம் மற்றும் பொருளாதார நிலைகள் மற்றும் அளவீடுகள் ஆகியவற்றைக் கொடுக்கின்றன.

இன்று பொருளாதாரம் அல்லது அதன் பகுதியை ஆராயும் பதிவுற்ற மற்றும் விவரிக்கும் கல்விப் புலங்களின் வரிசையில் சமூக அறிவியல்களான பொருளாதாரம், அதேபோல வரலாற்றின் கிளைகளான (பொருளாதார வரலாறு) அல்லது புவியியல் (பொருளாதாரப் புவியியல்) ஆகியன அடங்கியுள்ளன. மனித நடவடிக்கைகளுக்கு நேரடியாகத் தொடர்புள்ள நடைமுறைக் களங்களில், உற்பத்தி, விநியோகம், பரிமாற்றம் மற்றும் பொருட்கள் மற்றும் சேவைகளில் ஒட்டுமொத்தமாக ஈடுபட்டுள்ளவற்றில் பொறியியல் துறையிலிருந்து மேலாண்மை மற்றும் வணிக நிர்வாகத்திலிருந்து செயல்முறை அறிவியல் மற்றும் நிதி வரை விரிந்துள்ளன.

அனைத்து வகையான தொழில்கள், வேலைகள், பொருளாதாரக் காரணிகள் அல்லது பொருளாதார நடவடிக்கைகள் பொருளாதாரத்திற்குப் பங்களிக்கின்றன. நுகர்வு, சேமிப்பு மற்றும் முதலீடு ஆகியவை பொருளாதாரத்தில் முக்கிய மாறுநிலைக் கூறுகளாகும். மேலும் அவை சந்தைச் சமநிலையைத் தீர்மானிக்கின்றன. பொருளாதார நடவடிக்கையில் மூன்று முக்கியத் துறைகளுள்ளன, அவையாவன: விவசாயம், தொழில் மற்றும் சேவைத் துறை ஆகும். அனைத்தையும் சரிவர நடத்துவதற்கான படிக்கலை அரசாங்கம் உருவாக்க வேண்டும். அப்படி சரியான நடைமுறைகள் உருவாகும் பட்சத்தில் நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் நாங்கள் ஒரு மேம்படுதலை காண முடியும்.

# இலங்கை நாணயத்தின் வரலாறு

இலங்கை நீண்ட வரலாற்றையும் அதேபோன்று நீண்டதும் செல்வம் மிகுந்த பொருளாதார வரலாற்றையும் கொண்டதொரு நாடாகும் அத்தகைய வரலாற்றினைக் கற்பது பொருளியலாளாகளுக்கு மட்டுமன்றி சமூகத்திலுள்ள ஒவ்வொருவருக்கும் நன்மையளிப்பதாக அமையும் என்பதில் ஐயமில்லை நாட்டின் வெவ்வேறு காலப்பகுதியில் பயன்படுத்தப்பட்ட நாணயக் குத்திகள் அந்நாட்டின் வரலாற்றினைக் கற்கும் பொழுது முக்கிய பங்கினை ஆற்றுகின்றன. அளவில் சிறிதாக இருந்தபோதும் அதன் அற்பசொற்ப விடயங்களினூடாக நாணயங்கள் அவை பயன்படுத்தப்பட்ட நாட்டின் பொருளாதாரம் மற்றும் கலாச்சார வரலாறு பற்றிய பெறுமதிமிக்க தகவல்களை வழங்கக்கூடியதாக இருக்கிறன.

## தொலமியின் உலக வரைபடத்தில் இலங்கை பெரிதாக உள்ளது ஏன்?

கி.பி. 150ஆம் ஆண்டளவில் உரோமில் வசித்த தொலமியினால் வரையப்பட்ட உலக வரைபடமே இங்கு காணப்படுகின்றது அதனை அவர் மிகவும் சரியான நெடுங்கோடு மற்றும் அகலக்கோடுகளுக்கடையிலான இணைப்புக்களை கொண்டதாக வரைந்துள்ளார். என்னும் மத்தியதரைப் பிரதேசத்தையும், ஐரோப்பா மற்றும் மத்திய கிழக்கையும் மிகச் சிறந்த விதத்தில் காட்டியுள்ள தொலமியின் வரைபடத்தில் இலங்கை மிகப் பெரிதாகக் காட்டப்பட்டுள்ளது. ஆயினும் அது தற்செயலானதொன்றல்ல அவர் வாழ்ந்த காலத்திற்கு முன்னர் இருந்தே உலக மக்களிடையே தொடர்பில் இலங்கை காணப்பட்ட வரவேற்பே அதன் மூலம் எடுத்துக்காட்டப்படுகின்றது. நீளத்திலும் அகலத்திலும் சிறியதாக இருந்த போதிலும் முழு உலத்திலும் அதற்கு பெரும் மதிப்பும் வரவேற்பும். காணப்பட்டது. பண்டைய காலத்தில் எமது நாடு மக்களின் கவனத்தை பார்ப்பதற்கு ஒரு காரணமாயிருந்தது யாதெனில், இது தூர கிழக்கிலிருந்து மேற்கு வரை வியாபித்திருந்த கடல் பட்டுப்பாதையின் மத்தியில் அமைந்திருந்தமையேயாகும். அதேபோன்று அது தரைவழிப் பட்டுப்பாதைக்குள் பிரவேசிக்கின்ற ஒரு நுழைவாயிலாகவும் காணப்பட்டது. மேற்கிலிருந்தும்




கிழக்கிலிருந்தும் வருகை தந்த வணிகர்கள் மற்றும் நாடுகளைக் கண்டறியும் பயணிகள் இந்நிலப் பரப்பிலேயே சந்தித்துக்கொண்டனர். இலங்கை அவர்களுக்கான வர்த்தக மத்திய நிலையமொன்றாகக் காணப்பட்டது. இது பற்றிய அநேகமான தகவல்கள் கிரேக்க, உரோம மற்றும் சீன எழுத்தாளர்களால் குறிப்பிடப்பட்டுள்ளன. இந்த விடயங்கள் இலங்கையின் பொருளாதார வரலாற்றை வெளிப்படுத்துகின்றன. பாரிய நீர்ப்பாசனத் திட்டங்களை நெருக்கமாகப் பரிசோதிக்கும் பொழுது அக்காலகட்டத்தில் இலங்கையில் பொறியியல் கலையும் வேளாண்மையும் மிகவும் அபிவிருத்தியடைந்த மட்டத்தில் காணப்பட்டதென்பது தெளிவாகின்றது. அதுமட்டுமன்றி அதற்கு சமாந்திரமாக இலங்கையில் அபிவிருத்தியடைந்த வியாபார முறையொன்றும் நடைமுறையில் இருந்தது. இம்முயற்சிகள் பற்றிய விபரமான தகவல்களை கல்வெட்டுக்கள், வம்சக்கதைகள், நீண்டகால ராஜபரம்பரைகள்) பண்டைய கடித ஆவணங்கள் மற்றும் ஏனைய தொல்பொருளியல் சான்றுகளின் ஊடாகப் பெறலாம். இச் சான்றுகளில் நாணயங்கள் மற்றும் கல் வெட்டுக்களுக்கு சிறப்பானதொரு இடம் காணப்படுகின்றது. பண்டையகால இலங்கையின் பொருளாதார

தமிழர் பொருண்மியம் வாரமலர் TAMILS ECONOMY




**இலங்கையில் 22 கரட் (ஒரு பவுண்) தங்கத்தின் சந்தை விலை 2,04,850 ரூபா.**

**24 கரட் தங்கம் 2,23,450 ரூபாவுக்கு நேற்றைய தினம் விற்பனை செய்யப்பட்டது.**




**கேள்வி -** தற்போது ஏற்பட்டுள்ள கனமழை காரணமாக விவசாயிகள் இழப்புகளை சந்தித்திருக்கிறார்கள் அவர்களுக்கு ஏதேனும் இழப்பீடுகளை அரசு வழங்குமா?

**பதில் -**பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்குவதற்கான நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன,

உடனடியாக கிளிநொச்சி போன்ற மாவட்டங்களில் விவசாய நிலங்களின் சேதத்தை மதிப்பீடு செய்யும் பணிகள் தொடங்கியுள்ளன. இதன் அடிப்படையில் விவசாயிகளுக்கு பொருளாதார இழப்பீடுகள் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

**சேந்தன்**
**கிளிநொச்சி**

**கேள்வி -** இலங்கையை தொடர்ந்தும் அரிசியை இறக்குமதி செய்ய வேண்டிய நிலவரம் ஏற்படுமா?

**பதில் -**தற்போதைய கனமழை மற்றும் வெள்ளத்தால் ஏற்பட்ட நெற்செய்கை அழிவுகள் மற்றும் பயிர் விளைச்சல் குறைவு காரணமாக, அரிசியை தொடர்ந்தும் இறக்குமதி செய்ய வேண்டிய நிலை உருவாகும் வாய்ப்பு அதிகமாக உள்ளது.

வரவிருக்கும் அறுவடை பருவம் மற்றும் சர்வதேச சந்தை நிலைமைக்கு இணங்க அரசாங்கத்தின் பொருளாதாரத் திட்டங்கள் முக்கியமாக இருக்கும்.

உற்பத்தி சரிவில் தொடர்ந்து முன்னேற்றம் இல்லை என்றால், இலங்கைக்கு அரிசி இறக்குமதியை அதிகரிக்க வேண்டிய தேவை ஏற்படலாம்.

**சண்முகநாதன் சபேசன்**

**கேள்வி -** இலங்கையின் பொருளாதாரத்தை புதிய அரசாங்கம் மாற்றத்தை ஏற்படுத்த முனைகிறதா?

**பதில் -**2025ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம் பல முக்கிய மாற்றங்களைச் கொண்டுவரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. முக்கியமாக, அரச வருமானத்தை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 10%-இல் இருந்து 15%-க்கு உயர்த்தும் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இது எதிர்கால பொருளாதார நெருக்கடிகளை தடுக்க உதவும் என்று கருதப்படுகிறது .

மேலும், பொருளாதாரம் 2025ஆம் ஆண்டில் 3% வளர்ச்சியை அடையும் என மத்திய வங்கியின் கணிப்புகள் தெரிவிக்கின்றன. அன்னியச் செலாவணி வருவாயை அதிகரிக்கவும், சுற்றுலா மற்றும் ஏற்றுமதித் துறைகளுக்கு முக்கியத்துவம் வழங்கவும் திட்டங்கள் உள்ளன .எனினும், இது நீண்டகால முறைமையான செயல்பாடுகளின் ஊடாகவே உறுதிப்படுத்தப்படும்

**தனபாலன்**
**மட்டு**

**உங்கள் கேள்விகளை**

**தமிழர் பொருண்மியம்,**
**கிறீன் மீடியா ஹவுஸ்,**
**68, குறோசெட் வீதி, யாழ்ப்பாணம்.**
**என்ற முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.**
**வாட்ஸ் அப் முகவரி +94 777 304010**




| | |
|---|---|
| கத்தரிக்காய் | 320/= |
| உருளைக்கிழங்கு | 340/= |
| பச்சை மிளகாய் | 300/= |
| தக்காளி | 380/= |
| மரவள்ளிக்கிழங்கு | 300/= |
| கோவா | 280/= |
| கரட் | 290/= |
| வாழைக்காய் | 260/= |
| சின்ன வெங்காயம் | 300/= |
| பாகற்காய் | 360/= |
| வெண்டிக்காய் | 200/= |
| பயற்றங்காய் | 180/= |
| பீற்றூட் | 220/= |
| முருங்கைக்காய் | 400/= |
| தேங்காய் | 160/= |




**வாங்கும் விலை**

| | |
|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் - | 192/= |
| கனடா டொலர் - | 207/= |
| சீன யுவான் - | 40/= |
| யுரோ - | 313/= |
| ஜப்பான் யென் - | 1.9/= |
| சிங்கப்பூர்டொலர் - | 219/= |
| ஸ்ரோலிங் பவுண் - | 374/= |
| சுவிஸ் பிராங் - | 331/= |
| அமெரிக்க டொலர் - | 289/= |

**விற்கும் விலை**

| | |
|---|---|
| ஆஸ்திரேலியன் டொலர் - | 201/= |
| கனடா டொலர் - | 216/= |
| சீன யுவான் - | 42/= |
| யுரோ - | 325/= |
| ஜப்பான் யென் - | 2.0/= |
| சிங்கப்பூர் டொலர் | 227/= |
| ஸ்ரோலிங் பவுண் - | 391/= |
| சுவிஸ் பிராங் - | 346/= |
| அமெரிக்க டொலர் - | 297/= |

# எங்கட ஆச்சி

காரைக்கவி கந்தையா பத்மானந்தன்



விடியக்காலத்தால அப்பதான் பனையால விழுந்த பனங்காய் மாதிரி வீட்டு விறாந்தையில சக்கப்பணிய இருந்த வீட்டம்மா முகநூலிலை வருகிற ஆற்றையும் பதிவை தன்ரை பதிவு மாதிரி போடுற முகநூல் எழுத்தர் மாதிரி ஒரு கொப்பியிலை இருந்த என்னத்தையோ இன்னொரு கொப்பியில எழுதிக் கொண்டிருந்தா. பக்கத்தில வழக்கம்போல சூமில பராக்குப்பார்த்த படியே பாடம்படிக்கிற சின்னவள் உந்த கொப்பியடிக்கிற பதிவுகளுக்கெல்லாம் வாசிக்காமலே விருப்புப் போடுற நட்புகள் மாதிரி வீட்டம்மான்ரை கொப்பியடிப்பை பார்த்து ரசித்துக்கொண்டு இருந்தாள்.

உப்பிடி எழுதிக்கொண்டு இருந்த வீட்டம்மா அட சனியனை..நரகத்தி முள்ளே..நரகாலி... எண்டு கத்தவும் போனைத்தழுவித்தடவிக்கொண்டிருந்த நான் என்னையாக்கும் சொல்லுறா எண்டு திடுக்கிட்டுஎட்டிப்பாத்தன்.பக்கத்தில இருந்த கதிரைக்கு கீழால ஒரு கறுத்த ஈரலிப்பான அட்டை வாரிவளவில இருந்து வலந்தலை வரை கீரைப்பிடிக்கு விலை கேட்டுப்போறவர் மாதிரி உடம்பை இடம்வலமா நெளிச்சபடி ஊர்ந்து போய்க்கொண்டு இருந்தது. அப்பாடா வீட்டம்மா அந்த அட்டையைத்தான் திட்டி இருக்கிறா எண்ட பிறகுதான் எனக்கு நெஞ்சுக்கை தண்ணியே வந்திச்சு.

அங்கை பார் ஊரடங்கு நேரத்தில மெயின் றோட்டால போனாக் கொறோனாக்குப் பயமெண்டு குறுக்கு றோட்டுகளால கோறோனேவைக் கூட்டிக்கொண்டு போற குறுக்கால போற கோதாரி விழுவார் மாதிரி என்னண்டு போகுது பார் எண்டவ சும்மா திண்டு திண்டுபோட்டு வேலை வெட்டி ஒண்டும் செய்யாம பேஸ்புக்கில எழுதிறவை மாதிரி பார் என்ன விளைச்சல் எண்டா. வீட்டம்மா இப்பிடி ஏதும் சந்தர்ப்பங்கள் கிடைச்சா கிறெடிற்காட் மாதிரி மக்சிமம் பாவிச்சுப்போடுவா. பிறகு பாத்தா முன்னால போற அட்டைக்குப் பின்னால அத்தியாவசிய சேவையில இணைஞ்ச மண் லொறி மாதிரி இன்னும் ஒரு சிவப்பு அட்டை போய்க்கொண்டு இருந்தது.

உந்த மண் லொறி நினைப்பு வரேக்கைதான் எங்கட சனங்கள் உங்க றோட்டு வழிய போகேக்கை வரேக்கை கண்மண் தெரியாம ஓடி அடிபட்டுச் சாகிறதும் அங்கவீனமாய்ப் போகிறதும் ஞாபகம் வந்திச்சு. உந்த வாகனம் ஓடுற கனபேருக்கு நெஞ்சுப் பயமே கிடையாது எண்டுவா எங்கட ஆச்சி . இயமனுக்கு ஏஜன்ட் மாதிரி வீதி ஒழுங்குகள் போக்குவரத்து விதிகளைப் பின்பற்றுறது வலு குறைவு. அதிலும் மீசை முளைக்க முதலே மோட்டச்சயிக்கிள் ஓட ஆசைப்பட்டு தாய்தேப்பனுக்கு கரைச்சல் குடுத்து வாங்கி முறுக்கிக்கொண்டு போற பெடியள் கடும் ஆபத்தானவங்கள். அவங்கள் தங்களுக்கும் ஆபத்தை விலைக்கு வாங்கி றோட்டால போற வாறவைக்கு அதே ஆபத்தை இலவசமாக் குடுப்பாங்கள்.

உதமாதிரி கொழும்பில ஓடித்திரியிற சாப்பாடு காவியள் இன்னுமொரு விதமான கரைச்சல். அவங்களுக்கு நடந்து போற ஆற்றையும் கவட்டைப் பாத்தா மேம்பாலம் மாதிரித் தெரியுமாக்கும் கிட்ட வந்துதான் வெட்டிக் கொண்டு போவாங்கள் .நான் ஒரு சின்ன மோட்டச்சயிக்கிள் வைச்சிருக்கிறன் அதிலதான் போறது வாறது. பின்னால வாற ஓட்டோக்காறர் கோண் அடிச்சு ஏன் மாத்தயா நடந்து போகலாந்தானே எண்டுவாங்கள்.

அவள் சின்னவளைச் சிலவேளை பள்ளிக்கூடம் கூட்டிக்கொண்டு போகேக்கை அப்பா சயிக்கிள்ளை போறவை எல்லாம் விலத்திக்கொண்டு போகினம் ரெண்டாம் பெல் அடிக்கிறதுக்கிடையில எண்டான்னை போகவேணும் எண்டு பின்னால இருந்து சிடுசிடுப்பாள்.

ஆச்சி நெடுகவும் முந்தி ஒரு மனுசனுக்கு வேகத்தை விட விவேகம் தான் முக்கியம் எண்டுவா. ஆச்சி சொன்ன கன விசயங்களை நான் பின்பற்றா விட்டாலும் உந்த வேக விசயத்தில நான் வலு கவனம்.இன்னொரு விசயத்தை சொல்ல வேணும் உந்த நடைபாதையில சிவப்பு விளக்கு எரியேக்கை அதுக்குள்ளால நடந்து போறவையாலையும் சனத்துக்கு பெரிய கரைச்சல். போன கிழமை உப்பிடித்தான் வெள்ளவத்தையில எங்கட ஆள் ஒருத்தர் வாய் நிறைய வெத்திலையையும் குதப்பிக் கொண்டு ரெலிபோனில ஆ...உவன் ஆறுமத்தான் என்னை என்னண்டு நினைச்சவன் . என்னத்துக் என்ரை வேலியில குழை வெட்டினவன். ஆரைக்கேட்டு வெட்டினவன்...

அவனுக்கு இப்ப வந்தன் எண்டால் செய்யிற வேலை செய்வன். சுப்பிறீம் கோடு வரையும் போவன் தெரியுமே. உவன் லண்டனில இருக்கிற சின்னவன் உங்க குறானா திரியுது போக வேண்டாம் எண்டத்தில நான் வரேல்லை. இல்லாட்டில் ஆறுமத்தான ஒரு கை பாப்பன் எண்டு வெத்திலைச் சாறை றோட்டில துப்பிப்போட்டு குறுக்கால போக வந்த ஓட்டோக்காறன் ஒருத்தன் பூறுவா எண்டு பேச ..நீ என்ன ஆறுமத்தான்ரை தம்பியே பூரவோ எண்டிறாய் ஏலுமெண்டால் பூர் பாப்பம் எண்ட படியே நடந்து போனார்.

# உங்கள் படைப்பாக்கத் திறனுக்கு ஒரு வாய்ப்பு



நவீன காலத்தில் உற்பத்தித் துறையில் ஈடுபடும்போது அதனை மேம்படுத்தவும் இலகுபடுத்தவும் புதிய உபகரணங்கள் அல்லது இயந்திரங்கள் தேவைப்படுகின்றன.

அவ்வாறான கருவிகள் பலவற்றை கடந்த காலங்களில் எம்மவர்கள் கண்டுபிடித்திருக்கின்றார்கள்.

உங்களிடமும் அவ்வாறான ஒரு யோசனை இருந்து, அதனைச் செயற்படுத்த உதவி தேவையாக இருந்தால் அதனை வழங்க தமிழர் பொருண்மியம் தயாராக இருக்கின்றது.

இரண்டு பிரிவுகளாக இதற்கான உதவிகளை வழங்குவதற்கு பொருண்மியம் குழுவினர் திட்டமிட்டுள்ளார்கள்.

## உள்நாட்டு உற்பத்தி மேம்பாட்டிற்கான புதிய இலகு கருவிகளை கண்டுபிடித்தல்

1. வேலையை இலகுபடுத்துவதும் நேரத்தை மிச்சப்படுத்துவதுமாக அமைதல்.
2. சமூக பாவனைக்கு உகந்ததாகவும் பாதுகாப்பானதாகவும் அமைதல்.
3. கூடுதலாக கிடைக்கப்பெறும் வளங்களைக்கொண்டு உருவாக்க கூடியதாக அமைதல்.
4. ஏற்கனவே கண்டுபிடிக்கப்படாத, சொந்த தயாரிப்பாக இருக்க வேண்டும்.
5. நியாயமான விலையில் எல்லோருக்கும் கிடைக்ககூடியதாகவும், அனைவரும் பயன்படுத்தகூடியதாகவும் அமைதல்.

இதற்கான உங்கள் யோசனைகளை நீங்கள் முன்வைக்கலாம். உங்களுடைய முன்மொழிவுடன் அதற்குத் தேவையான செலவுத் தொகையும் குறிப்பிடப்பட வேண்டும்.

தெரிவு செய்யப்படும் திட்டங்களுக்கு தேவையான நிதி உதவியை வழங்க தமிழர் பொருண்மியம் தயாராகவுள்ளது.

## மக்களை வலுப்படுத்தும் சனசமூக நிலையங்களினை அடையாளப்படுத்தல்

1. பதிவுசெய்யப்பட்ட சனசமூக நிலையங்கள் இப்போட்டியில் பங்குபற்றலாம்.
2. இவர்கள் தமது சமூகத்து மக்களையும் உள்ளூர் வளங்களையும் இணைத்து திட்டங்களை மேற்கொள்வது பொருத்தப்பாடானது.
3. அவர்கள் தமது சமூகத்தின் வளர்ச்சிக்காக ஆற்றிவரும் பணிகளையும் , வரும் காலத்தில் உள்நாட்டு அல்லது தமது சமூகத்தில் செயற்படுத்துவதற்கு ஆயத்தமாக இருக்கும் திட்டங்களையும் சமர்ப்பிக்கலாம்.
4. திட்டங்கள் அனைத்தும் அந்த சமூகத்தின் நன்மை கருதுவனவாயும், அவர்களனைவரதும் வாழ்வாதாரத்தை பலப்படுத்துவதாகவும் இருக்க வேண்டும்.
5. கண்காணிப்பு குழுவினரால் ஆராய்ந்து முடிவுறுத்தப்படும் திட்டங்கள் போட்டிக்கு ஏற்றுக்கொள்ளப்படும். அதற்கான நிதி உதவிகளும் வழங்கப்படும்.

மேலதிக விபரங்கள் அடுத்த வாரம்

உங்களுடைய முன்மொழிவுகளை வாட்ஸ் அப் மூலமாகவோ மின்னஞ்சல் மூலமாகவோ அனுப்பிவைக்கலாம்.

**வாட்ஸ் அப் இலக்கங்கள் +94 777 30 4010 / +94 702 67 5575**
**மின்னஞ்சல் - tamilseconomy@gmail.com**

**சிறிமாவோ அம்மையாரின் ஆட்சிக்காலத்தில் திடீரெனப்புகுந்தது தன்னலம். விவசாயி அதிகவிலைக்கு நெல்லை விற்க முடிவு செய்தான் களப்பிச்சை கொடுப்பதை எல்லோரும் விரும்பவில்லை கூலி செய்பவனுக்கு பணமே கூலியானது. விளையும் பொருட்களை தனது தேவைக்குக்கூட இல்லாமல் விற்று பணமாக்கினார்கள். இதனால் மறுபோக விதைப்புக்கு வியாபாரிகளை நாடினார்கள்.**

# எங்கட வாழ்வியல்

## பார்வை 16



தமிழ்க்கவி

வன்னியில் பெருமழை. குளங்கள் உடைப்பெடுக்கும் சந்தர்ப்பம். ஆனால் இன்னும் சில பல குளங்களில் நீர் நிரம்பவில்லை எனற விசித்திரமான தகவல்களும் வரத்தான் செய்கின்றன. காரணம் குளம் நிரம்பிவிட்டால் பலருடைய வீடுகளும் காணாமல் போய்விடுவதற்கான சாத்தியப்பாடுகள் உள்ளதால் ஏற்கெனவே சில வழிகளைக்கண்டு குளத்தை நிரம்ப விடாமல் பணத்தைக் கொட்டி திறந்து விடுகிறார்கள்.

மேலதிகமாக வயல்களில் நீர் பாய்ந்து கொண்டிருப்பதால் வயல்களின் நிலையும் மிகவும் கவலைக்கிடமாகி விட்டது. விதைத்தோம் நான்கு நாட்கள் வானம் வெளிப்பாக இருந்தது. அதனால் மகிழ்ச்சியாக இருந்தோம். ஐந்தாவது நாள் மழை கொட்டத் தொடங்கியது. இன்றுடன் பதினைந்து நாட்களுக்கு மேலாகிறது. வயல் வெளியில் எந்த வயலுக்கும் எல்லை தெரியவில்லை. வரம்புகளை மூடி பெருவெள்ளமாக காட்சியளிக்கிறது. என்னவோ கடவுள் அளந்ததுதான். என்று பெரு மூச்சு விடுகிறான் விவசாயி. ஆனால் வெள்ளம் வடியட்டுமே என்ன பாடுபட்டாவது திரும்பவும் நெல்லைக் கொண்டு போய் வயலில் விதைக்கவே



செய்வான். அவன்தான் விவசாயி.

விவசாயம் செய்பவனுக்கு அது தொழில் என்பதைவிட அதுதான் அவனது ஆன்ம ஈடேற்றம் அவன் சேற்றில் இறங்கியே ஆவான். அப்படி இல்லாது போனால் மண்ணைக்கிண்டி எதையாவது புதைப்பான். அதுதான் அவனது வாழ்க்கை அது இல்லாது போனால் அவனால் நிம்மதியாக இருக்க முடியாது. அது அவனது கடமையா இல்லையா என்பது கூட, அவனுக்குத் தெரியாது. லாபம் கருதிச் செய்தாலும் அது லாபம் தராது போனாலும் அவன் அதை தொடர்ந்து செய்தே ஆவான். வேறு எந்த தொழில் செய்பவரும் தொழில் நட்டமாகிப் பொனால் அதை ஏறக்கட்டிவிட்டு மறுபடி வேறு வெலை தேடுவான். விவசாயி அப்படியல்ல அவனால் மண்ணைக்கிழறாமல் இருக்க முடியாது. தாய்ப்பால் அருந்தும் குழந்தை தாயின் மார்பைக்கிளறுவது போல அவன் பூமித்தாயின் வயிற்றை துளாவி பயிர் செய்கிறான்.

அப்படியே செய்து விட்டுப்போ என்று இயற்கை அவனை அனுமதிப்பதில்லை. அவன் இந்த பிரபஞ்சத்துடன் போட்டி போட்டாக வேண்டும். இயற்கை அனர்த்தங்களை ஏற்று வாழ்ந்தாக வேண்டும் வரட்சி குளிர் வெள்ளம் பீடைகள் என எத்தனை விதமான போராட்ங்களின் பின்னாக தான் அவன் தனது உற்பத்திகளை கொண்டு உயிரினங்களை வாழ வைக்கிறான். மனிதர்களை மட்டுமன்றி கால்நடைகளுக்கும் சிறு பூச்சி புழுக்களுக்கும் பறவைகளுக்கும் உணவளிக்கிறான். அவனுக்கும் பாரிய இடர்காலங்கள் வருவதுண்டு. அவற்றைத் தாங்கியே அவன் நிமிர்ந்து நிற்கிறான். ஆனாலும் சக மனிதர்களால் அவன் கவுரவிக்கப்படுவதில்லை. அவன்



கண்டுகொள்ளப்படுவதில்லை.

போர் நடந்த காலத்தில் நெல் விதைக்கும் ஒவ்வொரு விவசாயிக்கும், தமது நெல்லை விற்பனை செய்ய முடிவதில்லை. இந்த வருடம் மனைவியின் நகைகளை ஈடு வைத்து நெல் விதைத்து அதை அறுவடை செய்து வீட்டிற்குள் அடுக்கிய பின், அடுத்த விதைப்பிற்காக சில நகைகளை விற்றவர்களும் உண்டு. போனபோகத்து நெல் விற்கவில்லையே? பிறகு எதற்கு திரும்பவும் விதைக்க வேண்டும் எனக்கேட்டால், "எனது வயலை நான் எப்படி மலடாகப் போட முடியும் அது விளைகிற வயல் விதைத்தே ஆக வேண்டும்." என்பான். சென்ற போகத்து நெல் வீட்டில் கிடக்கும் அடுத்த போகத்து நெல் வயலில் தயாராகும். இப்போது அதை அறுத்து எங்கே அடுக்குவது என்ற கேள்வியும் கூடவே எழும்.

நாங்கள் அந்தக்கேள்வியை போராளிகளின் நிதி சார்ந்த துறையினரிடம் கேட்போம். அரிசிதான் தட்டுப்பாடாக இருக்கிறதே இந்த நெல்லை கொள்வனவு செய்ய கொழும்பு வியாபாரிகளை அனுமதிக்கலாமே என்பது போன்ற கேள்விகளை கேட்போம் தகுந்த பதில் கிடைக்கும். 'நெல்லை களஞ்சியப்படுத்த களஞ்சியங்களை அமைக்க முடியாது காரணம் அடுத்த நாளே அந்த இடம் விமானத்தாக்குதலுக்கு உள்ளாகலாம். ஆக எமக்கு தேவையான அளவில்தான் நெல்லை கொள்வனவு செய்ய முடியும். அடுத்ததாக கொழும்பு வியாபாரிகளை நாம் ஒருளவுக்கு அனுமதித்துள்ளோம். கட்டுப்பாடின்றி அனுமதித்தால் எமக்கும் நெல் தட்டுப்பாடாகிவிடும். எனவே எமக்கான நெல்லை விவசாயிகளிடமே கையிருப்பில் வைக்க செய்தல் மிக முக்கியம்" அது சரியாகத்தான் தெரிந்தது. மக்களும் வேறு வழியின்றி அதை ஏற்றார்கள். ஏராளமான விவசாயிகள் இருநூறு முந்நூறு மூடைகளுக்கு மேலாக நெல்லை வைத்துக் கொண்டு மீளவும் விதைக்க வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளானார்கள். ஆனால் அதை கட்டாயம் என்று கருதாமல் மகிழ்ச்சியோடு செய்தார்கள். மனிக குறைந்த அளவாகவேனும் இயக்க நிறுவனங்கள் நெல்லை கொள்வனவு செய்தன.

இப்படி ஒரு மழைக்காலம் வந்தபோது இயக்கம் கொள்வனவு செய்த நெல்லை அவித்து காயவைக்க இடமில்லை. முடியவில்லை. எனவே பச்சையரிசியாகவே மக்களுக்கு விநியோகித்தது. ஒருவருக்கு இரண்டு கிலோ அரிசி தினசரி வழங்கப்பட்டது. அவர் அடுத்தநாளும் கடையின் அரிசி வாங்கும்வரிசையில்நின்றே ஆகவேண்டும். மக்கள் மிகவும் சிரமப்பட்டார்கள். அப்போது சில கோவில் நிர்வாகங்களும் ஐயர்மாரும் மனமுவந்து மூடை மூடையாக லட்சக்கணக்கான ரூபாய்கள் பெறுமதியான அரிசியை போராளிகளுக்கு இந்த மக்கள் சேவைக்காக வழங்கினார்கள். அவர்களது அனுமதியின்றி நான் பெயர்களை குறிப்பிட முடியவில்லை சிலர் உயிரோடும் இல்லை.



தமிழர்களால் எந்த இக்கட்டுகளையும் சமாளிக்க முடியும் என்ற நற்பெயரை இந்த போர்க்காலம் வழங்கியது. முள்ளியவளை நெடுங்கேணி மக்கள் தமது வீடுகளை தொழிற்சாலைகளாக மாற்றினர். பெண்கள் நெல்லை அவித்து காயவைத்து உரலில் போட்டு குத்தி அரிசியாக்கும் வேலைகளில் ஈடுபடுத்தப்பட்டனர். அவர்களுக்கும் கூலி கிடைத்தது வேலையற்று இடம்பெயர்ந்த நிலையில் வருந்திய மக்கள் பெரும்பாலாக தொழிலில் ஈடுபட்டு தமது தேவைகளுக்கான வருவாயையும் பெற்றனர். நெல்லை நெல்லாக விற்க முடியாது போனாலும் நெல்லை அரிசியாக்கி விற்கும் முயற்சி பெரு வெற்றி கண்டது. மக்களுக்கும் கைக்குத்தல் அரிசி கிடைத்தது. இன்று இது நடைமுறை சாத்தியமா?

# நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கு வரி மற்றும் வருவாய் சேகரிப்பு துறைகளின் பங்கு: மறுசீரமைப்பின் அவசியம்



AGS. சுவாமிநாதன் சர்மா
பட்டயக்கணக்காளர்,
வரி முகாமைத்துவ ஆலோசகர்

இலங்கையின் வருமானத் திணைக்களங்கள் தேசிய அபிவிருத்தியை முன்னெடுப்பதற்குத் தேவையான நிதியை அரசாங்கத்திடம் இருப்பதை உறுதி செய்வதில் முக்கிய பங்கு வகிக்கின்றன. இருப்பினும், வருவாயை அதிகரிக்கவும் இணக்க கலாச்சாரத்தை வளர்க்கவும், இந்த துறைகள் டிஜிட்டல் மாற்றம், ஒத்துழைப்பு, வெளிப்படைத்தன்மை மற்றும் சிறந்த அமுலாக்கத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும். உள்நாட்டு இறைவரித்திணைக்களம் (IRD), சுங்கம், கலால் மற்றும் கம்பனிகள் பதிவாளர் திணைக்களம் (ROC) ஆகியோரின் ஒருங்கிணைந்த முயற்சியானது வரி வசூலை அதிகரிப்பது மட்டுமல்லாமல், வரி முறையின் மீதான நம்பிக்கையை மீட்டெடுக்கவும், இறுதியில் நிலையான பொருளாதார வளர்ச்சிக்கு வழி வகுக்கும்.

இலங்கையின் பொருளாதார முன்னேற்றமானது அதன் வரி மற்றும் வருவாய் சேகரிப்பு நிறுவனங்களின் வினைத்திறன் மற்றும் வினைத்திறனைக் கணிசமான அளவில் சார்ந்துள்ளது. உள்நாட்டு இறைவரித்திணைக்களம் (IRD), இலங்கை சுங்கம், கலால் திணைக்களம் மற்றும் கம்பனிகள் பதிவாளர் திணைக்களம் (ROC) போன்ற திணைக்களங்கள் நாட்டின் அபிவிருத்திக்கு வேண்டியவருவாயை சேகரிப்பதில் முக்கிய பங்கு வகிக்கின்றன. எவ்வாறாயினும், மிகவும் நிலையான மற்றும் பயனுள்ள வரி கலாச்சாரத்தை உருவாக்குவதற்கும், இணக்கத்தை அதிகரிப்பதற்கும் மற்றும் வருவாய் சேகரிப்பை அதிகரிப்பதற்கும் இவற்றிற்கு இடையேயான அணுகுமுறையை மறுசீரமைக்க வேண்டிய அவசியம் முக்கியமானது.

வரி இணக்கம் மற்றும் பொருளாதாரப் பங்களிப்பை மேம்படுத்த இந்தத் துறைகள் ஒவ்வொன்றும் அதன் கவனத்தை எவ்வாறு மாற்றலாம் என்பது பற்றி இங்கே பார்ப்போம்:

## 1. உள்நாட்டு இறைவரித் திணைக்களம் (IRD)

வருமான வரி, கார்ப்பரேட் வரிகள், ஏயுவு மற்றும் பிற நேரடி மற்றும் மறைமுக வரிகளை சேகரிப்பதற்கு உள்நாட்டு இறைவரித் திணைக்களம் முதன்மையான நிறுவனமாகும். இலங்கையின் நிதிக் கொள்கையில் அதன் மையத்தன்மை இருந்தபோதிலும், திணைக்களம் திறமையின்மை மற்றும் வரி செலுத்துவோர் மத்தியில் நம்பிக்கையின்மை காரணமாக அடிக்கடி விமர்சிக்கப்படுகின்றது. மாற்றத்திற்கான முக்கிய பகுதிகள்:

### டிஜிட்டல் மாற்றம் மற்றும் தன்னியக்க இயந்திரம்:

• டிஜிட்டல் வரித் தாக்கல், செயலாக்கம் மற்றும் சேகரிப்பு அமைப்புகளை முழுமையாக ஏற்றுக்கொண்டு அதன் அமைப்புகளை நவீனமயமாக்குவதற்கு உள்நாட்டு இறைவரித் திணைக்களம் முன்னுரிமை அளிக்க வேண்டும்.

• இதன் மூலம் மனித பிழைகளை கணிசமாகக் குறைக்கலாம், செயல்திறனை மேம்படுத்தலாம் மற்றும் ஊழலைக் குறைக்கலாம்.

• குடிமக்கள் எளிதாகத் தாக்கல் செய்து வரிகளைச் செலுத்தக்கூடிய ஆன்லைன், பயனர் நட்புத் தளம், செயல்முறையை எளிதாக்கும் மற்றும் இணக்கத்தை ஊக்குவிக்கும்.

### வரி செலுத்துவோர் உதவி மற்றும் அறிவுறுத்தல்கள்:

அர்ப்பணிப்புள்ள வரி செலுத்துவோர் கல்வித் திட்டங்களை நிறுவுவது மிக முக்கியமானது.

• பொதுப் பணிமனைகள், நிகழ்நிலை பயிற்சிகள் மற்றும் 24/7 உதவிச்சேவைகள் மூலம் வழிகாட்டுதலை வழங்குவதன் மூலம் வரி செலுத்துவோர் அடிக்கடி எதிர்கொள்ளும் சிக்கலை உள்நாட்டு இறைவரித் திணைக்களம் குறைக்க முடியும்.

•SMEக்கள்வரையறுக்கப்பட்ட வளங்களால் வரி இணக்கத்தை கையாள்வதில் பிரச்சனையை எதிர் நோக்குவதால் இந்த திட்டங்கள் குறிப்பாக ளுஆநுக்களை குறிவைக்க வேண்டும்.

### இலக்கு ஏய்ப்புக்கான தரவு பகுப்பாய்வு:

•வரி ஏய்ப்பு போக்குகளை அடையாளம் காண உள்நாட்டு இறைவரித்திணைக்களம் மேம்பட்டத் தரவு பகுப்பாய்வுகளில் முதலீடு செய்ய வேண்டும்.

• வெவ்வேறு ஏஜென்சிகள் மற்றும் நிதி நிறுவனங்களின் குறுக்கு-குறிப்பு தரவு, குறைவான வருமானம் மற்றும் மோசடி உரிமைகோரல்களைக் கண்டறிய உதவும்.

• இலக்கு தணிக்கைகள் மற்றும் விசாரணைகளில் கவனம் செலுத்துவது செலவுகளைக் குறைக்கும் அதே வேளையில் இணக்கத்தை கணிசமாக அதிகரிக்கும்.

### பொது வெளிப்படைத்தன்மை:

• அமைப்பில் நம்பிக்கையை வளர்ப்பதற்கு வெளிப்படைத்தன்மை தேவை.

• சேகரிக்கப்பட்ட வரி வருவாய்கள் பற்றிய வருடாந்திர அறிக்கைகளை வெளியிடுவது மற்றும் இந்த வருவாய் எவ்வாறு பொது நலனுக்காக பயன்படுத்தப்பட்டது என்பதைக் குறிப்பிடுவது அமைப்பில் நம்பிக்கையை வளர்க்க உதவும்.

## 2. இலங்கை சுங்கம்

இலங்கை சுங்கமானது முக்கியமாக இறக்குமதி மற்றும் ஏற்றுமதி வரிகள் மூலம் அரசாங்க வருமானத்தின் முக்கிய ஆதாரமாக உள்ளது. சர்வதேச வர்த்தகத்தை நிர்வகிப்பதில் திணைக்களம் முக்கிய பங்கு வகிக்கும் அதே வேளையில், கடத்தல், குறைவான விலைப்பட்டியல் மற்றும் சரக்குகளின் தவறான வகைப்பாடு ஆகியவற்றின் மூலம் வருமான இழப்புகள் மற்றும் குறைவான அறிக்கையிடல் ஆகியவை முக்கிய கவலையாக உள்ளது. மாற்றத்திற்கான முக்கிய பகுதிகள்:

### எல்லைக் கட்டுப்பாடுகள் மற்றும் தொழில்நுட்பத்தை வலுப்படுத்துதல்:

•எக்ஸ்ரே ஸ்கேனர்கள், தானியங்கி ஆபத்து விவரக்குறிப்பு அமைப்புகள் மற்றும் AI- உந்துதல் அச்சுறுத்தல் கண்டறிதல் கருவிகள் போன்ற அதிநவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி சுங்கம் அதன் கண்காணிப்பு வழிமுறைகளை மேம்படுத்த வேண்டும்.

• இது சட்டவிரோத இறக்குமதி, கடத்தல் மற்றும் மோசடி ஆகியவற்றிலிருந்து

# மறுசீரமைப்பின் அவசியம்




வருவாய் இழப்பைக் குறைக்க உதவும்.

**செயல்முறைகளில் தன்னியக்க இயந்திரம் மற்றும் வெளிப்படைத்தன்மை:**

• அனுமதி மற்றும் ஆய்வு செயல்முறைகளை மேலும் தானியக்கமாக்குவதன் மூலம் சுங்கம் செயல்திறனை மேம்படுத்துவது மட்டுமல்லாமல் ஊழல் நடைமுறைகளுக்கான வாய்ப்புகளையும் குறைக்கலாம்.

• ஒரு முழுமையான ஒருங்கிணைந்த மின்-சுங்கத் தளம் தடையற்ற அறிவிப்பு மற்றும் பொருட்களை அனுமதிப்பதை அனுமதிக்கும், வருவாயை அதிகரிக்கும் மற்றும் இறக்குமதியாளர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்களுக்கான தாமதங்களைக் குறைக்கும்.

**இறக்குமதியாளர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்களுடனான ஈடுபாடு:**

• கடமை விதிமுறைகள் குறித்த தெளிவான வழிகாட்டுதல்களை வழங்குவதன் மூலம் வணிக சமூகத்துடன் நம்பிக்கையை வளர்ப்பது, விரைவான சர்ச்சையைத் தீர்ப்பது மற்றும் பொருட்களின் வெளிப்படையான வகைப்பாட்டை உறுதி செய்வது ஆகியவை சிறந்த இணக்கத்தை ஊக்குவிக்கும்.

• மேலும் கூட்டு அணுகுமுறை சுங்க அதிகாரிகள் மற்றும் வர்த்தகர்களுக்கு இடையே உள்ள விரோதப் போக்கைக் குறைக்கும்.

### 3. கலால் துறை

மது, புகையிலை மற்றும் தொடர்புடைய பொருட்களின் உற்பத்தி, விநியோகம் மற்றும் விற்பனை ஆகியவற்றிலிருந்து வரி வசூலிப்பதில் கலால் திணைக்களத்தின் முதன்மை கவனம் உள்ளது. எவ்வாறாயினும், இந்த மிகவும் ஒழுங்குபடுத்தப்பட்ட துறைகளில் சட்டவிரோத உற்பத்தி, கடத்தல் மற்றும் வரி ஏய்ப்பு தொடர்பான சவால்களை திணைக்களம் எதிர்கொள்கின்றது. மாற்றத்திற்கான முக்கிய பகுதிகள்:

**மேம்படுத்தப்பட்ட கண்காணிப்பு மற்றும் கண்காணிப்பு அமைப்புகள்:**

• வரி முத்திரைகள், டிஜிட்டல் உற்பத்தி கண்காணிப்பு போன்ற உயர்-தொழில்நுட்ப கண்காணிப்பு அமைப்புகளை அறிமுகப்படுத்துதல் மற்றும் வெளிப்படையான விநியோகச் சங்கிலி மேலாண்மைக்கான புளொக்செயின் தொழில்நுட்பத்தைப் (Blockchain Technology) பயன்படுத்துதல் ஆகியவை மது மற்றும் புகையிலை துறைகளில் வரி ஏய்ப்பைக் குறைக்கும்.

• இந்த அமைப்புகள், உற்பத்தியிலிருந்து விற்பனை வரை பொருட்களைக் கண்டறிய உதவுகின்றன, வரி விதிக்கப்படாத பொருட்கள் சந்தைக்கு வராமல் இருப்பதை உறுதி செய்கின்றது.

**அதிகரித்த ஆய்வுகள் மற்றும் அமுலாக்கம்:**

• உற்பத்தி வசதிகள், களஞ்சிய சாலைகள் மற்றும் சில்லறை விற்பனை நிலையங்கள் ஆகியவற்றின் வழக்கமான மற்றும் முன்னெச்சரிக்கையற்ற திடீர் ஆய்வுகள் இணக்கத்தை உறுதிப்படுத்த முடியும்.

• கறுப்புச் சந்தை விற்பனை மற்றும் உரிமம் பெறாத உற்பத்தி வசதிகளை ஒடுக்குவதில் கவனம் செலுத்துவது வருவாய் இழப்பைக் கட்டுப்படுத்தும்.

**சட்டவிரோத பொருட்கள் மீதான பொது கல்வி:**

• சட்டவிரோத மது மற்றும் புகையிலை வாங்குவதால் ஏற்படும் ஆபத்துகள் குறித்து நுகர்வோர் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவது வரி செலுத்தப்படாத பொருட்களுக்கான தேவையை குறைக்கும்.

• இந்த கறுப்புச் சந்தைப் பொருட்களின் நிதி மற்றும் சுகாதார விளைவுகளை விளக்கும் பொதுப் பிரச்சாரங்கள், கலால் விதிமுறைகளுக்கு பொதுமக்களின் ஆதரவை உருவாக்க உதவும்.

## 4. கம்பனிகள் பதிவாளர் திணைக்களம் (ROC)

இலங்கையில் வணிகங்களை ஒழுங்குபடுத்துவதில் கம்பனிகள்பதிவாளர் திணைக்களம் (ROC) முக்கிய பங்கு வகிக்கின்றது மற்றும் நிறுவனங்கள் நாட்டின் நிதி மற்றும் சட்ட கட்டமைப்பிற்கு இணங்குவதை உறுதி செய்கின்றது. இருப்பினும் சுமூக இணங்காமை, மோசடியான பதிவுகள் மற்றும் அமுலாக்கத்தின் பொதுவான பற்றாக்குறை ஆகியவற்றினால் ROC சவால்களை எதிர்கொள்கின்றது. மாற்றத்திற்கான முக்கிய பகுதிகள்:

**டிஜிட்டல் ஆளுகையை இணைத்தல்:**

நிறுவனப் பதிவுகள், தாக்கல்கள் மற்றும் ஆவணச் சமர்ப்பிப்புகள் உள்ளிட்ட கூடுதல் சேவைகளை ஆன்லைனில் முழுமையாக நகர்த்துவதன் மூலம், நிறுவனங்களின் பதிவாளர் செயல்முறைகளை நெறிப்படுத்தவும், காகிதப்பணிகளைக் குறைக்கவும் மற்றும் செயல்திறனை அதிகரிக்கவும் முடியும். வரி ஏய்ப்பு மற்றும் மோசடி நடவடிக்கைகளை சிறப்பாக பதிவுசெய்தல் மற்றும் எளிதாக அடையாளம் காணவும் இது அனுமதிக்கும்.

**இணங்காததற்கு கடுமையான அபராதங்கள்:**

• சரியான நேரத்தில் வருடாந்திர வருமானம், நிதி அறிக்கைகள் மற்றும் பிற தேவையான ஆவணங்களை தாக்கல் செய்யத் தவறிய நிறுவனங்களுக்கு கம்பனிகள்பதிவாளர் திணைக்களம் கடுமையான அபராதங்களைச்செயல்படுத்த வேண்டும்.

•அபராதங்களை மிகவும் கடுமையாக அமுலாக்குவதன் மூலம் இணக்கத்தை அதிகரிக்கவும் மற்றும் வருவாய் சேகரிப்பில் கூடுதலான அதிகரிப்பையும் காணக் கூடியதாக இருக்கும்.

**உள்நாட்டு இறைவரித் திணைக்களம் மற்றும் சுங்கத்துடன் ஒத்துழைப்பு:**

• கம்பனிகள் பதிவாளர் திணைக்களம் ஆனது உள்நாட்டு இறைவரித்திணைக்களம் மற்றும் சுங்கத் துறைகளுடன் நெருக்கமாக ஒத்துழைத்து பதிவுசெய்யப்பட்ட நிறுவனங்கள் வரி மற்றும் ஏனைய கடமைகளுக்கு இணங்குகின்றன என்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

•நிறுவனத்தின் வருவாய், வரி தாக்கல் மற்றும் பரிவர்த்தனைகள் பற்றிய தரவைப் பகிர்வது முரண்பாடுகளைக் கண்டறிந்து அனைத்துத் துறைகளிலும் சிறந்த அமுலாக்கத்திற்கு வழிவகுக்கும்.

## 5. துறைகளுக்கிடையேயான ஒத்துழைப்பை வலுப்படுத்துதல்

இலங்கையின் தற்போதைய அணுகுமுறையில் காணப்படும் குறைபாடுகளை இனங்கண்டு அதனை செவ்வனே நீக்கி, வருவாய் சேகரிப்புக்குப் பொறுப்பான பல்வேறு அரசாங்கத் திணைக்களங்களுக்கு இடையிலான வலுவான ஒத்துழைப்பை வலுப்படுத்துதல் மிகவும் முக்கியமாக அமைகின்றது. உள்நாட்டு இறைவரித் திணைக்களம், சுங்கம், கலால் மற்றும் கம்பனிகள்பதிவாளர் திணைக்களம் ஆகியவை பெரும்பாலும் முறையான தொடர்பற்ற முறையில் தன்னிச்சையாக செயல்படுகின்றன. இந்தக் குறைபாட்டினால் வரி ஏய்ப்பவர்களைக் கண்டறிந்து முழுமையான இணக்கத்தை உறுதிப்படுத்தும் திறனைக் கட்டுப்படுத்துகின்றன. மாற்றத்திற்கான முக்கிய பகுதிகள்:

**தரவுப் பகிர்வு மற்றும் ஒருங்கிணைப்பு:**

•இந்தத்துறைகள்தரவுகளைப்பகிர்வதற்கும் செயல்களை ஒருங்கிணைப்பதற்கும் அமைப்புகளை உருவாக்க வேண்டும்.

• எடுத்துக்காட்டாக, சுங்கம் மூலம் பொருட்களை இறக்குமதி செய்யும் வணிகங்கள் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் வருமான வரித்தாக்கல் செய்யவில்லை என்றால் உடனடியாக தெரியப்படுத்த வேண்டும்.

• இதேபோல், வரி ஏய்ப்பைத் தடுக்க நிறுவனத்தின் இலாபம் குறித்த கம்பனிகள் பதிவாளர்திணைக்களத்தின்தரவு உள்நாட்டு இறைவரித் திணைக்களம் மற்றும் சுங்கத் தரவுகளுடன் ஒப்பிட்டு ஒன்றுடன் ஒன்று சரி பார்த்துக் கொள்ளுதல் வேண்டும்.

**ஒருங்கிணைந்த டிஜிட்டல் தளங்கள்:**

• துறைகள் முழுவதும் வரித் தகவல்களை ஒருங்கிணைக்கும் ஒரு விரிவான டிஜிட்டல் தளம் வணிகங்களையும் தனிநபர்களையும் மிகவும் திறம்பட கண்காணிக்க உதவும்.

• இந்த ஒருங்கிணைந்த அமைப்பு வரிப் பதிவுகள், சுங்க வரிகள், கலால் கொடுப்பனவுகள் மற்றும் கார்ப்பரேட் தாக்கல் ஆகியவற்றின் நிகழ்நேர ஒப்பீட்டு சரிபார்ப்பை அனுமதிக்கும்.

• இது அதிக அளவு இணக்கத்தை உறுதி செய்யும்.

**கூட்டு பணிக்குழுக்கள் மற்றும் தணிக்கைகள்:**

• ஒருங்கிணைந்த தணிக்கைகள் மற்றும் விசாரணைகளை நடத்த உள்நாட்டு இறைவரித் திணைக்களம், சுங்கம், மற்றும் கலால் துறை ஆகியவற்றுக்கு இடையே கூட்டு பணிக்குழுக்களை நிறுவுவது வரி ஏய்ப்பு மற்றும் கடமை தவிர்ப்பு திட்டங்களை கண்டறிய உதவும்.

•இந்த முறைமையினை அதிக ஆபத்துள்ள தொழில்கள்(அரசு வருமானத்தை இழக்க கூடிய) மற்றும் இணங்காத பின்னணியை கொண்ட துறைகளை குறிவைக்க வேண்டும்

இலங்கையின் வருமானத் திணைக்களங்கள் தேசிய அபிவிருத்தியை முன்னெடுப்பதற்குத் தேவையான நிதியை அரசாங்கத்திடம் இருப்பதை உறுதி செய்வதில் முக்கிய பங்கு வகிக்கின்றன. இருப்பினும், வருவாயை அதிகரிக்கவும் இணக்க கலாச்சாரத்தை வளர்க்கவும், இந்த துறைகள் டிஜிட்டல் மாற்றம், ஒத்துழைப்பு, வெளிப்படைத்தன்மை மற்றும் சிறந்த அமுலாக்கத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும். உள்நாட்டு இறைவரித்திணைக்களம்(IRD), சுங்கம், கலால் மற்றும் கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்(ROC) ஆகியோரின் ஒருங்கிணைந்த முயற்சியானது வரி வசூலை அதிகரிப்பது மட்டுமல்லாமல், வரி முறையின் மீதான நம்பிக்கையை மீட்டெடுக்கவும், இறுதியில் நிலையான பொருளாதார வளர்ச்சிக்கு வழி வகுக்கும்.

# ஏற்றுமதியை ஊக்குவிப்பதற்கும் முதலீடுகளை கவர்வதற்கும் தொடர்ச்சியான மறுசீரமைப்புகள் அவசியம்

தற்போதுஇலங்கையின் பொருளாதாரம் நிலைப்படுத்தப்பட்டுள்ளது, 2024 இல் பொருளாதார வளர்ச்சியானது 4.4 சதவீதத்தை அடையும் என எதிர்பார்க்கப்பட்ட போதிலும் , முன்னைய எதிர்வுகூறல்களை இது விஞ்சிவிட்டது. முக்கிய கட்டமைப்பு மற்றும் கொள்கை மறுசீரமைப்புகள் ஆகியவற்றின் உதவியின் பிரகாரம்கைத்தொழில் மற்றும் சுற்றுலாத் துறையில் ஏற்பட்ட வளர்ச்சியின் காரணமாக நான்கு காலாண்டு காலப் பகுதியில் இந்த சாதகத் தோற்றப்பாடு தொடர்ந்துள்ளது என உலக வங்கி தெரிவிக்கிறது.

உலக வங்கியின் ஆண்டுக்கு இரு முறை வெளியீடான இலங்கை அபிவிருத்தி இற்றைப்படுத்தலில்(Sri Lanka Development Update), எதிர்கால வாய்ப்புகள் என தலைப்பிடப்பட்ட இன்றைய வெளியீட்டில், அறவிடல் எளிதில் பாதிக்கப்படக்கூடியதாக காணப்படுவதாகவும் பேரினப் பொருளியல் நிலைபெறும் தன்மையை பாதிக்கக்கூடியதாக காணப்படுவதாகவும் எச்சரித்துள்ளது, அத்தோடு கடனை வெற்றிகரமாக மீள்கட்டமைத்தல், மத்திய கால வளர்ச்சி மற்றும் வறுமையை குறைத்தல் ஆகியவற்றை அதிகரிப்பதற்கு தொடர்ச்சியான கட்டமைப்பு மறுசீரமைப்புகள் அவசியமாகும். ஏற்றுமதிகளை ஊக்குவித்தல், வெளிநாட்டு முதலீடுகளை கவருதல், பெண்கள் தொழிற்படை பங்களிப்புகளை மேம்படுத்துதல், உற்பத்தியை மேம்படுத்தல், மற்றும் வறுமை, உணவு பாதுகாப்பின்மை, நிதித் துறையில் காணப்படும் பாதிப்புறும் தன்மைகள் ஆகியவற்றினை பிரதான மறுசீரமைப்புக்களாக கொண்டு அதிகளவு அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் நிலைபேறான வளர்ச்சி அடைவது அவசியமாகும்.

வியாபாரம் மூலம் உயர்வான மற்றும் நிலைபேறான வளர்ச்சியை அடைவதற்கான ஆற்றல்கள் நாட்டில் காணப்படுகின்றன என இவ்வறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. வருடாந்தம் 10 பில்லியன் டொலர் மதிப்பிடப்பட்ட பயன்படுத்தப்படாத ஏற்றுமதி சார் ஆற்றல்கள் இலங்கையிடம் காணப்படுகின்றன, இதன் மூலம் சுமார் 142,500 புதிய தொழில்களை உருவாக்கலாம். அவசியமான மறுசீரமைப்புகள் நடைமுறைப்படுத்தப்படும் பட்சத்தில் உற்பத்தித் துறை, சேவைகள், விவசாயம் ஆகியவற்றில் பல்வகையில் ஏற்றுமதிகளை விரிவாக்கம் செய்வதற்கான காத்திரமான வாய்ப்புகள் காணப்படுகின்றன.

"இலங்கையின் அண்மைய பொருளாதார நிலைப்படுத்தல்கள், நான்கு காலாண்டு காலப் பகுதி வளர்ச்சி மற்றும் 2023 மிகை நடப்புக் கணக்கு ஆகியன முக்கிய திருப்புமுனைகளாகும்"




என மாலைதீவு, நேபாளம், இலங்கைக்கான உலக வங்கியின் பிராந்திய நாட்டுப் பணிப்பாளர் டேவிட் சிஸ்லன் குறிப்பிட்டுள்ளார். "இத்தருணத்தில், இலங்கையானது அதனது உண்மையான ஏற்றுமதி ஆற்றல்களை உணர்வதற்கான வாய்ப்புள்ளது. இது வருடாந்தம் 10 பில்லியன் டொலர்கள் என நாம் மதிப்பிட்டுள்ளோம். பூகோள பெறுமதி சந்தையில் தனது பங்குபற்றுதலை மேலும் காத்திரமாக மேற்கொள்வதற்கான வாய்ப்பு இலங்கைக்கு காணப்படுகின்றது, மற்றும் வேலைவாய்ப்புகளை உருவாக்கி வளர்ச்சியில் நிலைபெறுவதற்கு புவியியல் தோற்றப்பாட்டின் சாதகப் பயன்பாடுகளைப் பயன்படுத்தி வளர்ந்து வரும் பூகோள தோற்றப்பாட்டில் நன்மையை பெற்றுக் கொள்ள முடியும். முக்கியமான பொருளாதார மற்றும் ஆளுகை சார்ந்த மறுசீரமைப்புகளை தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்துவதன் மூலம் இந்த தருணத்திலிருந்து முழுமையான நன்மைகளை இலங்கை பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றன.".

2025 இல் 3.5 சதவீத மிதமான வளர்ச்சி ஏற்படலாம் என இவ்வறிக்கையில் எதிர்கூறப்பட்டுள்ளது. பொருளாதார நெருக்கடியின் வடுக்கள் காரணமாக மத்திய காலப் பகுதியினுள் மிதமான வழியில் வளர்ச்சி ஏற்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. . வறுமையானது படிப்படியாக குறைவடையும் என எதிர்பார்க்கப்பட்ட பொழுதிலும் கூட 2026 ஆம் ஆண்டு வரையில் 20 சதவீதத்திற்கும் அதிகமாகக் காணப்படலாம். 2024 இல் மத்திய வங்கியின் இலக்கான 5 சதவீதத்தை விட குறைவாக பணவீக்கம் காணப்பட்டு பின் கேள்விகள் அதிகரிக்கின்ற பொழுது படிப்படியாக அதிகரிக்கும். சுற்றுலாத் துறை மற்றும் வெளிநாட்டிலிருந்து பணம் அனுப்புதல் ஆகியவற்றின் காரணமாக 2024 ஆம் ஆண்டில் நடப்பு கணக்கானது மிகையாக காணப்படலாம் என எதிர்கூறப்பட்டுள்ளது.

இலங்கை அபிவிருத்தி இற்றைப்படுத லானது, தெற்காசிய அபிவிருத்தி இற்றைப்படுத்தலின் (South Asia Development Update) தோழமை ஆக்கமாகும், வருடத்திற்கு இரு முறை உலக வங்கியின் அறிக்கையானது தெற்காசிய பிராந்தியத்தில் பொருளாதார அபிவிருத்திகள் மற்றும் சுபீட்சங்கள் பற்றி ஆராய்வதுடன் இப்பிராந்தியத்திலுள்ள நாடுகள் எதிர்கொள்கின்ற கொள்கை ரீதியான சவால்கள் பற்றியும் பகுப்பாய்வு செய்கின்றது. 2024 ஒக்டோபரின் வெளியீடானது பெண்கள், வேலைகள் மற்றும் வளர்ச்சி என்ற தொனிப்பொருளில் இவ்வருடம் தெற்காசியாவில் 6.4 சதவீத வளர்ச்சியை எதிர்வு கூறியுள்ளதுடன், உலகில் துரிதமாக வளர்ந்து வரும் நுஆனுநு (நுஅநசபபைெ ஆயசமநவள யனெ னுநஎநடழிைபெ நுஉழழெஅல)பிராந்தியமாக தெற்காசியா மாற்றம் பெற்று வருகின்றது. தொழிற்படையில் பெண்களின் பங்குபற்றுதலை அதிகரிக்கச் செய்தல் மற்றும் பூகோள வர்த்தகம் மற்றும் முதலீடுகள் ஆகியவற்றில் மேலும் வாய்ப்புகளை ஏற்படுத்துதல் ஆகியவற்றினால் இப்பிராந்தியம் துரிதமாக வளர்வதற்கும் அதனது அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கும் உதவுகின்றன என உலக வங்கியின் பிராந்திய தோற்றப்பாடு தெரிவிக்கின்றது.

தமிழர் பொருளியம் வாரமலர் TAMILS ECONOMY




ஞாயிற்றுக்கிழமை 01.12.2024

# இலங்கை நாணயத்தின் வரலாறு

4ம் பக்கத் தொடர்ச்சி....

வரலாறு பற்றி இனங்காணக்கூடிய உள்நாட்டு மூலாதாரங்களான பெருந்தொகை நாணயங்கள் மற்றும் கல் வெட்டுக்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும்



பரவிக் காணப்படுகின்றன. உள்நாட்டு மூலாதாரங்களுக்கு மேலதிகமாக சர்வதேச வர்த்தகர்கள் மற்றும் வெளிநாட்டவர்களின் அறிக்கைகளின் மூலமும் பண்டையகால இலங்கையின் கடந்தகால வர்த்தகப் பொறிமுறை பற்றிய விடயங்கள் வெளிக்கொணரப்படுகின்றன. இலங்கையின் பொருளாதார வரலாறு பற்றிய காலங்களைக் கட்டியெழுப்பும் முயற்சியில் இத்தகவல்கள்அதிகளவு அனுகூலங்களை வழங்குகின்றன. இவற்றின்மூலம்அளப்பரிய உதவி கிடைக்கின்றது. இலங்கையின் நாணயப் பயன்பாட்டினை பின்வரும் காலப்பகுதிகளாகப் பிரிக்கமுடியும்.

1. அனுராதபுர யுகம்
2. பொலநறுவை தொடக்கம் கோட்டை வரையான யுகம்
3. கண்டி யுகம்
4. காலணித்துவ யுகம்
5. இலங்கை மத்திய வங்கி நிறுவப்பட்டதிலிருந்து சுதந்திரத்திற்குப் பின்னரான காலம்

### அனுராதபுர யுகம்

அனுராதபுர காலத்தில் பயன்படுத்தப்பட்ட நாணயக் குத்திகள் கஹபான சுவாஸ்திக நாணயக்குத்தி பிடரிமயிர் இல்லாத சிங்க நாணயக் குத்திகள் லக்ஷ்மி பளிங்குக்கல் கஹவானு அல்லது லங்கேஸ்வரர் நாணயக்குத்தி வெளிநாட்டு நாணயக்குத்தி அனுராதபுர இராசதானி (கி.மு. 377 – 1017) அதன் தலைநகரத்தின் பெயரினால் அழைக்கப்படும் அனுராதபுர இராசதானி பண்டைய இலங்கையில் நிறுவப்பட்ட முதலாவது இராசதானியாக விளங்கியது. கி.மு 377இல் மன்னன் பண்டுகாபயவினால் நிறுவப்பட்ட இந்த இராசதானி காலத்திற்குக்




காலம் ஆங்காங்கே சுதந்திரமான ஆட்சிகள் தோன்றினாலும் கூட நாடுமுழுவதும் அதன் அதிகாரம் பரவிக் காணப்பட்டது. அநுராதபுர இராசதானிக் காலகட்டத்தின் வர்த்தக நடவடிக்கைகள் மற்றும் நாணயப் பயன்பாடு பற்றிய அநேகமான தகவல்கள் கல்வெட்டுக்கள் மூலம் வெளிப்படுத்தப்படுகின்றன. அக்காலத்தில் நாணயத் தயாரிப்பு மற்றும் விநியோகம் மிகவும் முறைசார்ந்த அடிப்படையில் நடைபெற்றுள்ளதென்பது இதன் மூலம் தெளிவாகின்றது. நாணயத் தயாரிப்புக்குப் பொறுப்பான பணிப்பாளர் அக்காலத்தில் “ரூபடகா என அழைக்கப்பட்டுள்ளார் (பெரியகடு விஹாரை கல்வெட்டு). அதேபோன்று தயாரிக்கப்பட்ட நாணயங்களை அங்கீகரிப்பவர்“ரூபவாரா என்ற பெயரில் அழைக்கப்பட்டுள்ளார் (கதுறுவெவ கல்வெட்டு. மிகப் பழைய நாணயக் கூறு என இத்தீவில் அறியப்பட்டது கஹபான இவை சமஸ்கிருதத்தில் புராண எனவும் ஆங்கிலத்தில் எல்டிங்கஸ் எனவும் அழைக்கப்பட்டன. இவை பொதுவாக துளை அடையாளமிடப்பட்ட குத்திகள் என அறியப்பட்டன. குத்தியின் ஒரு பக்கத்திலோ அல்லது இரு பக்கங்களிலோ லோ ஓர் அடையாளக் குறி குத்தப்பட்டுள்ளது கஹபான பண்படுத்தப்பட்ட உலோகத் தகட்டில் கீறுகள் ஏற்படுத்தப்பட்டு உற்பத்தி செய்யப்பட்டதென நம்பப்படுகின்றது. அறியப்பட்ட அத்தகைய குத்திகள் வட்டம் சதுரம் செவ்வகம் நீண்ட செவ்வகம் போல பல வடிவங்களை உடையது. அவற்றின் நிறை முலைகளில் வெட்டப்படுவதன் மூலம் சரி செய்யப்பட்டுள்ளன கஹபானவின் லோகம் பெருமளவுக்கு வெள்ளியாகவே இருந்தது இதற்கமைய அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நாணயங்களில் அரச முத்திரை பதிக்கப்பட்டிருந்தது. இந்த நாணயங்கள் ஒருவரிடமிருந்து இன்னொருவருக்கு கைமாறும் போது பல்வேறு வகையான தனித்துவமான அடையாளங்கள் நாணயத்தின் மீது குறிக்கப்பட்டன. இதனால் இந்நாணயங்கள் ஒன்றிலிருந்து ஒன்று வேறுபட்ட பல அடையாளங்களைக்கொண்டிருக்கின்றன. அத்தகைய ஒரு நாணயத்தில் ஏறக்குறைய 20 அடையாளங்கள் இடப்பட்டுள்ளன. சூரியன், சந்திரன், யானை, நாய், மரம் ஆகியன அத்தகைய அடையாளங்களில் சிலவாகும் இத்தகைய 500 க்கும் மேற்பட்ட குறியீடுகள் ஷகஹபன நாணயத்தின் மீது இடப்பட்டுள்ளதென்பது இனங்காணப்பட்டுள்ளது ஆயினும் இந்த நாணயங்கள் இந்நாட்டில் தயாரிக்கப்பட்டவையல்ல இந்தியாவில் தயாரிக்கப்பட்ட நாணயங்களாகும் என்றே நம்பப்படுகின்றது. இவை சர்வதேச வர்த்தகத்தின் ஊடாக இந்திய வணிகர்களின் மூலம் இந்நாட்டிற்குக் கிடைத்துள்ளன. இந்த நாணயங்களைப் பின்பற்றியே இந்நாட்டில் கஹபன் தயாரிக்கப்பட்டுள்ளன. கிமு 3 வது நூற்றாண்டிலிருந்து கி.பி. 1வது நூற்றாண்டு வரை கஹபனநாணயங்கள் எமது நாட்டில் பயன்பாட்டில் இருந்துள்ளன. அநுராதபுரம்.



யானை மற்றும் ஸ்வாதிக்க நாணயம் | அரச மரம் மற்றும் ஸ்வாதிக்க நாணயம் | அரச மரம் மற்றும் ஸ்வாதிக்க நாணயம்

ஸ்வஸ்திகவையும். சதுரக் கோட்டுடன் கூடிய மூன்று கிளைகளைக் கொண்ட அரச மரமொன்றையும் காணக்கூடியதாக உள்ளது மறு பக்கத்தில் ஸ்வஸ்திகவும், திரிசூலத்தின் அடையாளமொன்றும் தாது கோபுரத்தின் அடையாளமொன்றும் உள்ளடங்கியுள்ளது எவ்வாறாயினும்நாணய அலகொன்றாக நோக்குகின்றபோது இந்த நாணயமும் கஹபன வகையைச் சேர்ந்த நாணயமொன்றாக இருக்கலாம்.

**பிடரிமயிர் இல்லாத சிங்கக் நாணயக்குத்திகள்**

இந்த நாணயம் செப்பு உலோகத்திலிருந்தேதயாரிக்கப்பட்டுள்ளது நாணயத்தின் ஒரு பக்கத்தில் சிங்க உருவம் காணப்படுகின்ற மறு பக்கத்தில் சிறிய மூன்று அல்லது நான்கு புள்ளிகள் காணப்படுகின்றன. மேற்படி புள்ளிகளின் மூலம்நாணயத்தின்பெறுமதிகாட்டப்பட்டுள்ளதென கருதலாம். இந்த நாணயத்தின் விட்டம் 1/2 - 3/4 அங்குலங்களுக்கிடையில் காணப்படுவதோடு நிறை அண்ணளவாக 15 – 40 கிறேன்ஸ் ஆகும். இந்நாணயம் கி.பி. 3 – 4 ஆம் நூற்றாண்டுகளி லேயே பயன்படுத்தப்பட் டுள்ளது. அநுராதபுரம் அகழ்வுகளின் போதும் வட பிராந்திய அகழ்வுகளின் போதும் இந்த வகையைச் சேர்ந்த நாணயங்களைக் கண்டெடுக்கப்பட்டுள்ளன.



பிடரிமயிர் இல்லாத சிங்கக் நாணயக்குத்திகள்

தொலுவில், வெஸ்ஸகிரியா சீகிரியா புன்னாபொல, தெதிகம். மினுவன்கொடை, உடவளவை அம்பலாங்கொடை திஸ்ஸ மகாராமய வல்லிபுரம், கந்தரோடை, யாழ்ப்பாணம் முல்லைத்தீவு மாந்தோட்டம், பதவியா திருகோணமலை ஆகிய பல பிரதேசங்களிலிருந்து இந்த வகையைச் சேர்ந்த நாணயங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

**சுவாஸ்திக நாணயக்குத்திகள்**

விபரிக்கப்பட் டுள்ள பல அடையாளங்களைக்“கஹபான” நாணய வகைகளுக்கு மேலதிகமாக அநுராதபுர காலகட்டத்தி மேலும் நாணயங்கள் பயன்படுத்தப் பட்டுள்ளன. யானை மற்றும் அடையாளமி நாணயங்கள் அவற்றில் ஒரு வகையாகும் செப்புக் காசாகும். இந்த நாணயங்களை தயாரிக்கின்ற போது “கஹபான” நாணயத்தில் காலத்திற்குக் காலம் குறிக்கப்பட்டி அடையாளங்களனில்ஒருசிலவற்றைத் தெரிவு செய்து இலச்சினை யொன்றுக்கு எடுத்து அச்சிடுதல் நடைபெற்றுள்ளதென்பதை காணக்கூடியதாக உள்ளது நாணயத்தின் ஒரு பக்கத்தில் நடக்கும் யானையொன்றின் உருவத்தையும், அரை பிறை அடையாளங்கள் மூன்றின் மூலம் தயாரிக்கப்பட்ட தாது கோபுரமொன்றையும்,


## தமிழர் பொருண்மியத்தில் உங்கள் விளம்பரங்களைப் பிரசுரிக்க...

### கட்டணவிபரம்

| | கறுப்பு வெள்ளை | வர்ணம் |
|---|---|---|
| முழுப்பக்கம் | ரூ.10,000/- | ரூ.20,000/- |
| அரைப்பக்கம் | ரூ.6,000/- | ரூ.12,000/- |
| காற்பக்கம் | ரூ.3,500/- | ரூ.8,000/- |
| வரி விளம்பரம் | இலவசம் | இலவசம் |

தமிழர் பொருண்மியம்,
கிறீன் மீடியா ஹவுஸ்,
68, குறோசெட் வீதி, யாழ்ப்பாணம்.

வாட்ஸ் அப் இலக்கம் +94 777 920 384

# பழந்தமிழரின் பயிர்ப்பாதுகாப்பு முறைகள்

சென்ற வாரத் தொடர்ச்சி ........

விலங்குகளைப் பிடிக்க வெடால் அல்லது எடால் என்ற கருவி பயன்படுத்தப்படுகின்றது. சங்க காலத்தில் பயன்படுத்திய 'அடார்' என்ற கருவியின் சிறிய மாற்று வடிவமாக வெடாலைக் கருதலாம்.

### பொய்ப் புலி உருவம்

தினைப்பயிரை சிறிய விலங்குகள் அழிக்காமல் காக்கப் பெண்புலிபோல் உருவம் செய்து, அதற்குக் கழலைக்காயைக் கண்ணாக அமைத்து உயிருள்ள புலி போன்ற தோற்றத்துடன் நிறுத்தியுள்ளனர். இப்பெண் புலியின் பொய்த்தோற்றம் கண்டு, அப்பக்கம் ஆண்புலியின் இயக்கம் இருக்கும்.

புலிக்கு அஞ்சிய விலங்குகள் தினைப் புனத்திற்கு வருவதில்லை. இதிலிருந்து உயிர்களிடையே அச்ச உணர்வை உண்டாக்கி அவைகளிடமிருந்து பயிர்களைக் காக்கும் ஓர் உத்தியைக்கையாண்டுள்ளதை அறியமுடிகிறது.

"கல்முகை வயப்புலி கழங்கு மெய்ப்படூஉ
புன்புலம் வித்திய புனவர் புணர்த்த
மெய்ம்மை யன்ன பெண்பாற் புணர்ந்து"
(ஐங். 246 2 - 4)

'பொய்ப்புலி' முறையை இன்று வயல்களில் வைக்கப்படும் சோளக்கொல்லைப் பொம்மையோடு ஒப்பு நோக்கலாம்.

### களையெடுத்தல்

நன்செய்நிலங்களில்விளைந்த களைகளைக் கையால் பிடுங்கியும், புன்செய் நிலத்தில் விளைந்த களைகளைத் 'துளர்' (களைக்கொட்டு அல்லது களைக்கொத்து) கொண்டு வெட்டியும் எடுத்த செய்தி காணப்படுகின்றது.

நன்செய் பயிரான நெற்பயிருக்கிடையே களையாக வளர்ந்துள்ள மலை மல்லிகை, மரல் ஆகியவற்றைக் கையால் பறித்ததையும், புன்செய் பயிரான தினையிடையே வளர்ந் துள்ள களைகளைத் துளர் கொண்டு வெட்டி எடுத்ததையும் கீழ்க்காணும் குறிஞ்சித்திணைப் பாடல்களில் காணமுடிகின்றது.

"அருவிப் பரப்பின் ஐவனம் வித்திப்
பருவிலைக் குளவியடு பசுமரல் கட்கும்
காந்தள் வேலிச் சிறுகுடி பசிப்பிற்" (குறுந். 100 1-3)

"கடவை மிடைந்த துடவையஞ் சிறுதினைத்
துளரெறி நுண்டுகட் களைஞர் தங்கை"
(குறுந்.392 4-5)

அறுவடை

கார்ப் பருவ மழையில் விதைக்கப் பெற்ற புன்செய் பயிர்கள் முன்பனிக் காலத்தின் தொடக்கத்தில் விளைந்து விடுகின்றன. வேங்கை மலர்கள் மலர்ந்தவுடன் தினை அறுவடை செய்யப்படுகின்றது.




வேங்கை பூப்பது தினை அறுவடைக்குரிய காலமாகக் கருதப்படுகின்றது. குறிஞ்சி நில மக்கள் இரவு நேரங்களிலும் தினை அறுவடை செய்துள்ளனர். இரவு நேர அறுவடையின்போது விலங்குகள் அணுகாமலிருக்கத் தொண்டகப் பறையடித்து விலங்குகளை விரட்டி அறுவடை செய்ததைக் குறிஞ்சித்திணைப் பாடல்களில் காணமுடிகின்றது.

"சிறுதினை விளைந்த வியன்கண் இரும்புனத்து
இரவுஅரி வாரின் தொண்டகச் சிறுபறை
பானாள் யாமத்துங் கறங்கும்" (குறுந். 375 3-5)

கதிர்களுடன் கூடிய தினை, வரகு போன்றவைதாளுடன்அறுவடைசெய்யப்பட்டன. அறுவடை செய்தவற்றைப் பாறைகளின்மேல் குவித்து வைத்து, எருது அல்லது யானையைக் கொண்டு தாம்படித்த செய்தி காணப்படுகின்றது.

"மென்தினை நெடும்போர் புரிமார்
துஞ்சுகளிறு எடுப்பும் தம்பெருங்கல் நாட்டே"
(நற். 125 11-12)

"எருதுகால் உறாஅது இளைஞர் கொன்ற
சில்வினை வரகின் புல்லென் குப்பை"
(புறம். 327 1-2)

குறைந்த அளவு விளைச்சல் எனில் இளைஞர்கள்காலால்மிதித்துத்தானியங்களைப் பிரித்ததையும் அறிய முடிகிறது.

### தானியப் பாதுகாப்பு

யானை அல்லது எருதுகளைக் கொண்டு தாம்படித்துப் பிரித்தெடுத்தத் தானியங்களைப் பாறைகளின் மேலிட்டுக் குறவர்கள் நன்கு காயவைத்துள்ளனர். இவ்வாறு காய வைப்பதனால் தானியங்களிலுள்ள ஈரம் உலர்ந்து, நீண்ட நாள் கெடாமலிருக்க உதவுகின்றது. நன்செய் பயிராகிய நெல்லைக் 'கூடு' மற்றும் 'நெடுங்கூட்டிலிட்டும்', புன்செய் பயிராகிய தினை, வரகு போன்றவற்றைக் 'குதிர்' மற்றும் 'தொடுகூடுகளிலிட்டும்' சேமித்து வைத்திருந்ததைச் சங்க இலக்கியங்களின் வழியாக அறியமுடிகின்றது.

"இருங்கல் வியலறைச் செந்தினை பரப்பி"
(குறுந். 335 2)

"செவ்வி சேர்ந்த புள்ளி வெள்ளரை
விண்டுப் புரையும் புணர்நிலை நெடுங்கூட்டுப்
பிண்ட நெல்லின் தாய் மனை (நற். 26 2-4)

குறிஞ்சிநில மக்கள்காடுகளை வெட்டியழித்து, மரங்களை எரித்து, நிலங்களைத் திருத்திப் பயிர் செய்துள்ளனர். தினைப் பயிர்களுக்கிடையே அவரையையும், பருத்தியையும் ஊடுபயிராக விதைத்திருந்தனர்.

பண்டைத் தமிழரிடம் ஊடுபயிர் முறை செழுமைபெற்று இருந்ததைச் சங்க இலக்கியங்களால் அறிய முடிகிறது.

நெல், புல், வரகு, சாமை, தினை, இறங்கு, தோரை, இராகி, எள், கொள், பயறு, உழுந்து, அவரை, துவரை, கடலை, மொச்சை, கம்பு, சோளம் ஆகிய பதினெட்டு வகைப் பயிறுகளை மலைப்பகுதியில் விதைத்திருந்தனர்.

வேங்கை மலர்கள் மலரும் காலமே அறுவடைக்குரிய காலமாகக் கருதப்பட்டது. குளிர், தட்டை, தழல், கவண், ஞெகிழி, கணை, கிணைப்பறை, அடார் போன்றவற்றைப் பயிர்ப்பாதுகாப்புக் கருவிகளாகச் சங்க கால மக்கள் பயன்படுத்தியுள்ளனர்.

அவ்வகைப் பாதுகாப்பு முறைகள் பலவும் தற்கால வேளாண் குடிகளிடம் இன்றளவும் வழக்கத்தில் இருப்பதைக் காணமுடிகிறது.

# மழைக் காலமும் கால்நடை வளர்ப்பும்; இலங்கையின் கால்நடை வளர்ப்பு பொருளாதாரமும்

**சில விலங்குகள் குளிர்காலத்தில் சாப்பிடுவதைக் குறைத்துவிடும் என்பதால் அவற்றை அவதானித்து சிறப்பு உணவுகளை வழங்க வேண்டும். உடல்வெப்பத்தை உற்பத்தி செய்யும் அடர் தீவனத்தை பொருத்தமான அளவில் வழங்க வேண்டும். இல்லாது போனால் பாலுற்பத்தி குறைவதுடன் மாடும் நலிவடையும்.**

Dr.சிவபாத சுந்தரலிங்கம் கிருபானந்தகுமரன்

கால்நடை வளர்ப்பு என்பது இலங்கையின் முக்கியமான ஒரு பொருளாதாரக் கூறு. மனிதனின் புராதன தொழில்களில் கால்நடை வளர்ப்பு மிகமுக்கியமானது. பால், முட்டை, இறைச்சி, எரு, வேலைவாய்ப்பு என பல வழிகளிலும் கால்நடை வளர்ப்பு மக்களுக்கு வருவாயை ஏற்படுத்தும் துறையாகும். அத்துடன் நுகர்வோரின் புரத மற்றும் முக்கியமான ஊட்டச் சத்துகளின் தேவையைப் பூர்த்தி செய்வதாகவும் கால்நடை வளர்ப்பு அமைகிறது. பொருளாதார நெருக்கடியால் இலங்கை தள்ளாடும் சூழ்நிலையில், கால்நடை வளர்ப்பினூடாக கிராமிய மட்டத்திலும், தேசிய மட்டத்திலும் போசணைமட்டத்தை உயர்த்துவதோடு, இதனை மேம்படுத்துவதனூடாக

சில வருடங்களுக்கு முன் இலங்கையின் வடக்கு மாகாணத்தின் சில பகுதிகளில் அதிகளவில் பெய்த மழையினால் ஏற்பட்ட குளிருடன் கூடிய காலநிலையில் சிக்கி ஏராளமான கால்நடைகள் இறந்திருந்தன. இந்த நிலையை குளிர் அழுத்தம்/ அயர்ச்சி (Cold Stress) என்பார்கள். அன்றைய நாட்களில் சூழல் வெப்பநிலை 16 பாகை செல்சியஸ் வரை குறைந்திருந்தது. அந்த வருடம் வடக்கின் மேற்படி மாவட்டங்களில் வருடம் முழுவதும் பெரிதாக மழை கிடைத்திருக்கவில்லை என்பதனால் ஒரு வறட்சியான காலநிலையே நிலவியிருந்தது. இதனால் மாடுகள் உண்ணத்தக்க மேய்ச்சல் புற்களும் மிகக் குறைவாகவே கிடைத்திருந்தது. சரியான மேய்ச்சலின்மையால் மாடுகள் மெலிந்திருந்தன. குறிப்பாக அவற்றின் தோலின் கீழான கொழுப்புப் படை முற்று முழுதாக நீங்கிய நிலையிலேயே இருந்தது. குளிர் காலத்தில் இந்த கொழுப்புப் படையே கால்நடைகளின் கவசம். கொழுப்புப் படை குறைந்த நிலையில், ஏற்பட்ட அசாதாரண வெப்பநிலை வீழ்ச்சி பல கால்நடைகளின் இறப்புக்குக் காரணமாக அமைந்துவிட்டது. திறந்த வெளியில் வைத்திருந்த பல கறவை மாடுகள் குளிர் தாங்காமல் இறந்திருந்தன் குறிப்பாக இளம் கால்நடைகள். இந்தக் கட்டுரை மழைக் காலத்தின் போதான கறவை மாடு வளர்ப்பின் முகாமைத்துவ முறைகளை ஆராய்கிறது.

மழைக்காலம், கால்நடை வளர்ப்புக்குச் சவாலான காலமே. இக் காலம் பல உடல் அசௌகரியங்களையும் நோய் நிலைகளையும் உணவுப் பற்றாக்குறையையும் ஏற்படுத்த வல்லது. நேரடியாக நனைவதால் காய்ச்சல், சுவாச மற்றும் உணவுக் கால்வாய்த் தொகுதி தொற்றுகள் உண்டாவதுடன் கால்குளம்புகள் அழுகும் நிலையையும் ஏற்படும். அத்துடன் அதீத குளிர், வெள்ளத்தில் மூழ்குதல், தண்ணீர் நிரம்பிய கிணறு மற்றும் பள்ளங்களில் விழுதல், வழுவழுப்பான தரையில் சறுக்கி விழுந்து காயங்கள்ஃ அங்கவீனம் ஏற்படுதல், மின்னல் தாக்கம்ஃ



மின்சாரத் தாக்கத்துக்கு உட்படுதல், மழையின் பின் பெருகும் நுளம்புக் கடியால் இரத்தச் சோகைஃ நுளம்புக் காய்ச்சல் நோய் ஏற்படுதல், குடற்புழுத்தாக்கம், தீவனம் நஞ்சாதல் என பல பாதிப்புகளை மழைக் காலத்திலும் அதனை அண்டிய காலத்திலும் அவதானிக்க முடிகிறது.

இந்தப் பாதிப்புகளை தவிர்க்கும் வழிகளை ஆராய்வோம்.

### 1. கொட்டகை முகாமைத்துவம்

மாடுவளர்ப்பில் கொட்டகை மிக அவசியமானது. குறிப்பாக மழைக் காலத்தில் கொட்டகையின் வகிபாகம் அத்தியாவசியமானது. இந்தக் கட்டுரையின் தொடக்கத்தில் நான் கூறிய குளிர் அயர்ச்சியின் போது இறந்த கால்நடைகள் பெரும்பாலும் திறந்த வெளியில் நின்றவை. குறைந்தபட்சம் நனையாமல் 'தறப்பாள்' கொண்டு காக்கப்பட்ட கால்நடைகள் இறந்திருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

பண்ணையாளர்களுக்கு வருமானம் தரும் கால்நடைகளின் கொட்டகை விடயத்தில் அவர்கள் கட்டாயம் மிகுந்த கரிசனையுடன் இருக்க வேண்டும். சுத்தமாகவும், ஈரலிப்பற்றதாகவும், தண்ணீர் தேங்காததாகவும், காற்றோட்டம் கொண்டதாகவும், வழுக்கும்தன்மையற்றும், தண்ணீர் உடனடியாக ஓடக்கூடிய வடிகால் அமைப்புக் கொண்டதாகவும் கொட்டகை அமைய வேண்டும். இந்தக் காரணிகள் சரியாக இல்லாத போது கால்நடைகள் விபத்துக்கு உள்ளாகின்றன் நோய்த் தொற்றடைகின்றன. கொட்டகையின் சுற்றுப்புறம் மரம், செடிகள், பற்றைகள் அற்றும் தண்ணீர் தேங்காமல் சுத்தமாகவும் அமைய வேண்டும். பற்றைகள் காணப்படும் போது பாம்புகள், பூச்சிகளின் தாக்கம் ஏற்படலாம். தண்ணீர் தேங்கும் போது நுளம்புகளின் பெருக்கம் ஏற்படலாம். மேலும், கால்நடைகளின் எண்ணிக்கைக்கு அமைய கொட்டகை அமைய வேண்டும். அதிக எண்ணிக்கையில் கால்நடைகள் காணப்படும் போது நோய்த் தொற்றுகளும் இலகுவில் ஏற்படுகின்றன. காற்றோட்டம் குறையும் போது அமோனியா வாயு தேங்குவதால் சுவாசப் பிரச்சினைகளும் ஏற்படுகின்றன.

பண்ணையாளர்கள், மழைக் காலம் தொடங்க முன்னர் கொட்டகைகளை கால்நடைகளின் எண்ணிக்கைக்கு அமைய அமைக்க வேண்டும்என்பதுடன்பழுதடைந்த கொட்டகைகளை செப்பனிடுவதுடன், சுற்றுச் சூழலையும் சுத்தமாக வைத்திருக்க வேண்டும்.

### 2. தீவன முகாமைத்துவம்

மழைக் காலத்தில் தீவனத் தட்டுப்பாடு அதிகளவில் ஏற்படுகிறது. வடக்கு – கிழக்கு மாகாணங்களில் வாழும் பெரும்பாலான கால்நடைகள் மேய்ச்சலை நம்பியவை. அவற்றின் மேய்ச்சல் களங்களாக அதிகளவில் குளங்களும் வயல்களுமே உள்ளன. ஆனால் மழைக் காலத்தில் குளங்கள் நிரம்புவதுடன் வயல்கள் பயிர்ச்செய்கை பண்ணப்படுகின்றன. இதனால் கால்நடைகளுக்கு போதிய தீவனம் கிடைப்பதில்லை. எனவே மேற்படி நிலையை தணிக்க மாற்று வழிகளைத் தேட வேண்டும். தீவனப் பயிர்களைப் பயிரிடலாம். வைக்கோல் போன்றவற்றைச் சேமித்து மழைக் காலத்தில் வழங்கலாம். தீவன புற்செய்கை, ஊறுகாய்ப் புல் (Silage) செய்வதோடு, நிலமற்ற புல் வளர்ப்பை (Hydroponics) ஊக்குவிக்கலாம். வேலிகளில் தீவன மரங்களை வளர்த்து வழங்கலாம். மேய்ச்சல் தரவைகளை முறையாகப் பெறுவதுடன், முறையாகப் பரிபாலனமும் செய்ய வேண்டும். ஊர்களில் உள்ள பயிர் செய்யாத பகுதிகளை இதற்குப் பாவிக்கலாம். கால்நடைப் பண்ணையாளர்கள் விவசாய செய்கையாளர்களுடன் ஒரு உடன்பாட்டைச் செய்து, சகல பகுதிகளையும் பயிர்ச்செய்கைக்கு உட்படுத்தாமல், கால்நடைகளுக்கும் குறித்த அளவுப் பகுதியை மேய்ச்சலுக்கு விட்டுத் தர வழிசெய்ய வேண்டும். இந்தப் பருவகாலத்தில் கால்நடைகள் ஊட்டச்சத்துக் குறைவால் பாதிக்கப்படுவதால், அதனைச் சரிசெய்ய வெளியிலிருந்து ஊட்டச்சத்துகளை வழங்க வேண்டும். ஏனெனில், இந்தக் காலத்தில் புற்களில் ஊட்டச்சத்துக் குறைவாகவும் நீர்ச் சத்து அதிகமாகவும் காணப்படும்.

மழைக் காலத்தில் குடிநீரின் முகாமைத்துவம் சரிவர பேணப்பட வேண்டும். தண்ணீரின் சுகாதாரம் சரிவரப் பேணப்படாமல் விடப்பட்டால் பல நோய்கள் ஏற்பட வழியேற்படும். முடிந்தவரை சுத்தமான தண்ணீர் கிடைக்கும் வழியை ஏற்படுத்த வேண்டும். அடர்வுத் தீவனத்தைச் சேமிக்கும் போது ஈரலிப்பற்ற தண்ணீர் தொடுகையுறாத இடத்தைத் தேர்வு செய்ய வேண்டும். அடர்வுத் தீவனத்திலுள்ள மூலப்பொருட்கள் குறிப்பாக சோளம், ஈரலிப்பான காலத்தில் மதுவத் தொற்றுக்கு (Aflatoxin) இலகுவாக உட்படுகிறது. இதனால் நஞ்சாதல் நிலை தோன்றி கால்நடைகள் பாதிக்கப்படலாம். கடைகளில் வாங்கும் போதும் பூஞ்சணம் பிடித்த தீவனங்களை வாங்கக் கூடாது.

சில விலங்குகள் குளிர்காலத்தில் சாப்பிடுவதைக் குறைத்துவிடும் என்பதால் அவற்றை அவதானித்து சிறப்பு உணவுகளை வழங்க வேண்டும். உடல் வெப்பத்தை உற்பத்தி செய்யும் அடர் தீவனத்தை பொருத்தமான அளவில் வழங்க வேண்டும். இல்லாது போனால் பாலுற்பத்தி குறைவதுடன் மாடும் நலிவடையும்.

### 3. நோய் முகாமைத்துவம்

மழைக் காலம் பல நோய் நிலைமைகளுக்கு காரணமாக அமைகிறது. வெப்பநிலைக் குறைவும் ஈரலிப்பும் கால்நடைகளின் நோயெதிர்ப்புச் செயன்முறைகளைப் பாதிக்கச் செய்வதால் இலகுவில் பல நோய்க் காரணிகளை உள்வாங்கவும் வழி ஏற்படுகிறது. சூழலில் பெருகும் நோய்க் காரணிகள் இந்தப் பருவ காலத்திலேயே கால்நடைகளைத் தாக்கவும் செய்கின்றன. சில முக்கிய நோய்களை தடுப்பூசி மூலம் தவிர்க்கலாம். கால்வாய் நோய் (Foot And Mouth Disease), கருங்காலி நோய் (Black Quarter), தொண்டையடைப்பான் (Hemorrhagic Septicemia) போன்ற நோய்களுக்கான தடுப்பூசியை மழைக் காலத்துக்கு முன்னரே கால்நடை வைத்தியரைத் தொடர்பு கொண்டு வழங்க வேண்டும். முறையான குடற்புழு நீக்கம் அவசியம். மழைக் காலத்தின் பின் வடக்கு – கிழக்கு இலங்கையில் 'Immature Paramphistomiasis' எனும் இரப்பை தட்டைப் புழுத்தாக்கம் ஏற்பட்டு இளங் கால்நடைகள் இறக்கின்றன. மழைக் காலத்தில் பல பண்ணையாளர்கள் மாடுகளுக்கு முறையான குடற்புழு நீக்கத்தைச் செய்வதில்லை. மழைக் காலத்தில்தான் கட்டாயம் மாடுகளுக்கு குடற்புழு நீக்கம் செய்ய வேண்டும்.






கால்நடை வைத்தியரின் பரிந்துரையில் பொருத்தமான மருந்தை சரியான கால அளவில் வழங்க வேண்டும். முடிந்தவரை குடற்புழுக்கள் பெரிதும் இருக்க கூடிய குளக்கரைகளில் மழைக்காலம் மற்றும் மழைக் காலத்துக்கு பின்னரான சில மாதங்களுக்கு கால்நடைகளை மேயவிடுவதை தவிர்க்க வேண்டும். இந்தக் காலத்தில் பல குடற்புழுக்களைக் காவும் நத்தைகள் பெருகி தாக்கத்தை அதிகரிக்கின்றன.

சுத்தமான தண்ணீர், சுகாதாரமான சுற்றுப்புறம் மற்றும் கொட்டகை பல நோய்கள் பெருகுவதைத் தவிர்க்கும். சுகாதாரமின்மை காரணமாக, மழைக் காலத்தில் பால் கறத்தலின் போது மடியழற்சி (Mastitis) போன்ற பல நோய்கள் ஏற்படுகின்றன. மாடுகள் சேறான இடங்களில் படுக்கும் போது மடியும் மண்ணுடன் தொடுகையுற்று நோய்த்தொற்றுக்கு உள்ளாகிறது. எனவே மாடு படுக்கும் இடத்தை ஈரலிப்பற்று வைத்திருத்தல் அவசியமாவதுடன் பால் கறந்தவுடன் மாடுகளைப் படுக்க விடவும் கூடாது. பால் கறந்ததும் சில நிமிடங்களுக்கு முலையின் துவாரம் திறந்திருப்பதால் நோய்கள் புக வழி ஏற்படுகிறது. பால் கறப்பவர் சுகாதாரமாக இருப்பதுடன் பால் கறக்க முன் கைகளையும் மாட்டின் முலையையும் முறையாகச் சுத்தப்படுத்தியே பால் கறக்கத் தொடங்க வேண்டும்.

மழைக் காலம் நெருங்கும் முன், அதிக கால்நடைகள் இருந்தால் அவற்றைக் குறைக்க வேண்டும். அதிக நெருக்கடி நோய்த் தொற்றை ஏற்படுத்துவதுடன் தீவனச் செலவையும் கூட்டும். இந்தக் காலத்தில் கால்நடைகளை வாங்குவதை முடிந்தவரை தவிர்க்கலாம். அப்படியிருந்தும் வாங்க வாய்ப்பு ஏற்பட்டால், சில வாரம் தனிமைப்படுத்தி (Quarantine) தடுப்பூசி, குடற்புழு நீக்கம் செய்த பின்னரே பிற கால்நடைகளுடன் சேர்க்க வேண்டும்.

மழைக் காலத்தில் காற் குளம்பு பராமரிப்பு அவசியம். குளம்பு அழுகுதல் நோய் ஏற்படுவதால் மாடுகள் நடக்கச் சிரமப்படும். கொட்டகையின் நிலம் ஈரலிப்பற்றதாகவும் வழுக்காததாகவும் தண்ணீர் தேங்காததாகவும் அமைய வேண்டும். இக் காலத்தில் இறக்கும் விலங்கு உடல்களை எரித்தோ புதைத்தோ முறையாக அகற்ற வேண்டும். இல்லாது போனால் அதன் மூலம் நோய்த் தொற்றுகள் ஏற்பட வழி தோன்றும். நோய்ப்பட்ட விலங்குகளை தனிமைப்படுத்தியே சிகிச்சை செய்ய வேண்டும். இந்த நாட்களில் ஏனைய விலங்குகளும் நலிவடைவதால் நோய்கள் விரைவாகப் பரவும்.

உண்ணி, தெள்ளுத் தொற்றுகளும் அதிகளவு ஏற்படும் என்பதால் அதற்குரிய சிகிச்சைகளையும் செய்ய வேண்டும். உண்ணித் தொற்றால் இரத்தம் தொடர்பான பல நோய்கள் ஏற்பட்டு உயிரிழப்புகளும் நிகழ்வதோடு கால்நடைகளின் உற்பத்தி மற்றும் வளர்ச்சியும் குறைகிறது. மழைக் காலங்களில் ஏற்படும் ஈக்களின் பெருக்கத்தால் 'ஆழசயஒநடடய டீழளளை' போன்ற கண் தொற்றுகள் ஏற்பட்டு கால்நடைகளின் கண்பார்வையும் பாதிக்கப்படுகிறது. எனவே ஈக்களின் பெருக்கத்தை கட்டுப்படுத்துவதும் அவசியமாகிறது. இதனைத் தடுக்க முறையான எரு மற்றும் சிறுநீர் அகற்றுதலில் போதிய கவனம் செலுத்த வேண்டும்.

இந்தப் பிரச்சினைகளுக்கு மேலதிகமாக, திறந்த வெளியில் மேயும் கால்நடைகள் மழைக் காலத்தில் மின்னல் தாக்கத்துக்கு உட்படுகின்றன. வயல்கள், குளங்களில் மேய்ச்சல் தடைப்படுவதால் வீதியோரங்களில் மாடுகள் உணவைத் தேடத் தொடங்குவதால் விபத்துகள் ஏற்படுகின்றன. இதனால் மனிதர்கள் மற்றும் கால்நடைகளுக்கு உயிரிழப்புகளும் அங்கவீனங்களும் ஏற்படுகின்றன. மாடுகள் மழைக் குளிருக்கு இதமாக தார் வீதிகளில் படுப்பதையும் காணமுடியும். இந்த விடயத்தில் பண்ணையாளர்கள் பொறுப்பாக நடந்து கொள்ள வேண்டும். போதிய உணவுக் கையிருப்புக்கு வழி செய்வதோடு மேலதிக மாடுகளைக் குறைக்கவும் வேண்டும். வீதிகளில் மாடுகளை நடமாட விடுவதைக் குறைக்க வேண்டும். குளிர் மற்றும் நுளம்புகளைக் குறைக்க புகை போடும், வெப்பம் வழங்கும் செயற்பாடுகளை கொட்டகைகளுக்குள் செய்ய வேண்டும். இயற்கை அனர்த்தங்களில் கால்நடைகள் இறக்கும் போது காப்புறுதி செய்யப்பட்ட கால்நடைகளுக்கு இழப்பீடு கிடைக்கும் என்பதால் முடிந்தவரை கால்நடை வைத்திய அலுவலகங்களில் பண்ணைப்பதிவு, கால்நடைப்பதிவு என்பவற்றைச்செய்வதுடன் காப்புறுதியும்செய்து வைத்திருக்க வேண்டும்.

மழைக் காலத்தில் கறவை மாடு வளர்ப்பாளர்கள் செய்ய வேண்டிய பாதுகாப்பு நடைமுறைகளையும் சுகாதார மற்றும் ஏனைய முகாமைத்துவ விடயங்களையும் தெளிவுபடுத்தியுள்ளேன். இவற்றை முறையாகச் செய்வதன் மூலம் கால்நடைகளின் இழப்பைத் தவிர்த்து, நட்டமடையாமல் பாதுகாத்துக் கொள்ள முடியும்.

# காலநிலை மாற்றம்

புவி வெப்பமயமாதல் உலகில் பேரழிவை ஏற்படுத்தும் என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

மனிதர்களின் செயல்பாடுகளின் காரணமாக கரியமில வாயு வெளியேற்றம் அதிகரித்து, அதன் காரணமாக புவியின் வெப்பநிலையும் அதிகரித்துள்ளது. இதைத்தொடர்ந்து அதீத வானிலை மாற்றம், துருவ பகுதிகளில் உள்ள பனிப்பாறைகள் உருகுதல் உள்ளிட்ட மோசமான மாற்றங்கள் நிலவி வருகின்றன.

**பருவநிலை மாற்றம் என்றால் என்ன?**

பூமியின் சராசரி வெப்பநிலை 15 டிகிரி செல்சியஸ். ஆனால் அது கடந்த காலங்களில் குறைவாகவும், அதிகமாகவும் இருந்து வந்துள்ளது.

பருவநிலையில் இயற்கையாகவே மாற்றங்கள் இருந்து வந்தாலும், சமீபத்திய ஆண்டுகளில் பூமியின் வெப்பநிலை முன்னெப்போதுமில்லாத வகையில் வேகமாக உயர்ந்து வருவதாக விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.

சூரியனின் ஆற்றலில் குறிப்பிட்ட பங்கை பூமியின் வளிமண்டலம் எவ்வாறு உட்கிரகித்து கொள்கிறது என்பதை விளக்கும் பசுமை இல்ல விளைவுடன் இது இணைத்து பார்க்கப்படுகிறது.

பூமியின் நிலப்பரப்பிலிருந்து மீண்டும் விண்வெளிக்கு திரும்ப அனுப்பப்படும் சூரியனின் ஆற்றல், பூமியின் வளிமண்டலத்தில் உள்ள பசுமை இல்ல வாயுக்களால் உறிஞ்சப்பட்டு அனைத்து திசைகளிலும் மீண்டும் உமிழப்படுகிறது.

இதன் காரணமாக, பூமியின் வளிமண்டலத்தை ஒட்டிய பகுதிகள் மட்டுமின்றி, பூமியிலுள்ள நிலப்பரப்பின் வெப்பநிலையும் அதிகரிக்கிறது. இந்த செயல்முறை மட்டும் தொடர்ந்து நடைபெறவில்லை என்றால், பூமியின் வெப்பநிலையில் கடும் வீழ்ச்சி ஏற்பட்டு மனிதர்கள் உள்ளிட்ட உயிரினங்கள் எதுவும் வாழ முடியாத சூழ்நிலை ஏற்படும்.

இயற்கையாக சூரிய ஆற்றலை கொண்டு பூமியின் வளிமண்டலத்தில் நடக்கும் செயல்முறையோடு, பூமியின் நிலப்பரப்பில் இருந்து தொழிற்சாலைகள் மற்றும் விவசாயத்தின் மூலம் வெளியிடப்படும் வாயுக்களும் கூடுதலாக இணைந்து அதிகளவிலான ஆற்றல், பசுமை இல்ல விளைவின்போது சிதறடிக்கப்படுவதால் பூமியின் வெப்பநிலை உயருவதாக விஞ்ஞானிகள் நம்புகின்றனர்.

- பருவநிலை மாற்றம் காரணமாகும் பணக்கார நாடுகள் பாதிக்கப்படும் ஏழை நாடுகள்
- அதீத விவசாயத்தால் ஒட்டுமொத்த சுற்றுச்சூழலும் அழிந்து போகும் பேராபத்து

மேற்காணும் இந்த அசாதாரண மாற்றத்துக்கே பருவநிலை மாற்றம் அல்லது புவி வெப்பமயமாதல் என்று பெயர்.

**பசுமை இல்ல வாயுக்கள் என்றால் என்ன?**

வெப்பமயமாதலில் மிகப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்துவது நீராவிதான். எனினும் அது வளிமண்டலத்தில் சில நாட்கள் மட்டுமே நிலைத்திருக்கும்.

ஆனால், கரியமில வாயு ($CO_2$) மிக நீண்ட காலத்திற்கு வளிமண்டலத்தில் தங்கியிருக்கும். தொழில்துறைக்கு முந்தைய காலகட்டத்தில் இருந்தது போன்ற நிலைக்கு பூமியின் வளிமண்டலம் திரும்புவதற்கு நூற்றுக்கணக்கான ஆண்டுகள் ஆகும். அதுவும், இந்த மாற்றத்திற்கு பெருங்கடல்கள் போன்ற இயற்கை நீரியல் அமைப்புகளால் மட்டுமே வித்திட முடியும்.

மனிதர்களால் ஏற்படுத்தப்படும் கரியமில வாயு வெளியேற்றத்திற்கு பெரும்பாலும் புதைபடிவ எரிபொருள்களை எரிப்பதே காரணமாக உள்ளது. வளிமண்டலத்தில் காணப்படும் கரியமில வாயுக்களை உறிஞ்சக்கூடிய பூமியிலுள்ள காடுகள் அழிக்கப்படும்போது, அவற்றில் ஏற்கனவே உட்கிரகிக்கப்பட்டிருந்த கார்பனும் வெளியிடப்பட்டு, அது புவிவெப்பமயமாதலுக்கு வழிவகுக்கிறது.

தொழிற்புரட்சி தொடங்கிய 1750களில் இருந்து, இதுவரை 30 சதவீதத்துக்கும் அதிகமாக கரியமில வாயுவின் அளவு அதிகரித்துள்ளது. கடந்த 8 லட்சம் ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு தற்போது கரியமில வாயுக்களின் செறிவு வளிமண்டலத்தில் அதிகரித்துள்ளது.

மற்ற பசுமை இல்ல வாயுக்களான மீத்தேன், நைட்ரஸ் ஆக்ஸைடு உள்ளிட்டவையும் மனிதர்களின் செயல்பாடுகளின் காரணமாக அதிக அளவில் வெளியிடப்பட்டு வந்தாலும், கரியமில வாயுவுடன் ஒப்பிடும்போது அது மிகவும் குறைவே.

**பருவநிலை மாற்றத்திற்கான ஆதாரம் என்ன?**

தொழிற்புரட்சி பரவலாவதற்கு முன்னதாக இருந்ததை விட தற்போது பூமியின் வெப்பநிலை ஒரு டிகிரி செல்சியஸ் அதிகரித்துள்ளதாக உலக வானிலை மையம் கூறுகிறது.

பூமியின் மிகவும் வெப்பம் மிக்க ஆண்டுகளின் பட்டியலில் முதல் 20 இடங்களை, கடந்த 22 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட ஆண்டுகளே ஆக்கிரமித்துள்ளன. 2015 முதல் 2018 வரையிலான நான்கு ஆண்டுகளும் அதில் அடக்கம்.

2005 முதல் 2015 வரையிலான பத்தாண்டு காலத்தில் உலகம் முழுவதும் கடல் நீரின் மட்டம் சராசரியாக ஆண்டுக்கு 3.6 மில்லி மீட்டர் என்ற கணக்கில் அதிகரித்துள்ளது.

நீரின் வெப்பநிலை அதிகரிக்க, அதிகரிக்க அதன் பரும அளவு அதிகரிப்பதே இதுபோன்ற மாற்றங்களுக்கு மிகப் பெரிய காரணமாக உள்ளது.

இருப்பினும், பனிப்பாறைகள் உருகுவதே கடல்நீர் மட்ட உயர்வுக்கு முக்கிய காரணமாக தற்போது பார்க்கப்படுகிறது. துருவ பகுதிகள் மற்றும் அதை ஒட்டிய பகுதிகளிலுள்ள பனிப்பாறைகள் அதிகளவில் உருகி வருகின்றன.

1979 முதல் இதுவரையிலான காலகட்டத்தில் துருவ பகுதியில் உள்ள கடலில் உள்ள பனிப்பாறைகளின் இருப்பில் கடுமையான வீழ்ச்சி காணப்படுகிறது. மேற்கு அண்டார்டிக்காவில் பனிக்கட்டிகள் உருகி வருவதையும் செயற்கைக்கோள் தரவு காட்டுகிறது. சமீபத்திய ஆய்வில் கிழக்கு அண்டார்டிகாவும் தனது பனிப்பாறைகளை இழக்கத் தொடங்கியிருக்கலாம் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மாறிவரும் காலநிலை ஏற்படுத்தும் தாக்கங்கள், தாவரங்கள் மற்றும் விலங்குகளிலும் காணப்படுகின்றன. தாவரங்கள் முன்னதாகவே பூ விடுவது மற்றும் பழம் விளையும் பருவம் காலம் மற்றும் விலங்குகளின் வாழிடங்களில் ஏற்படும் மாற்றங்கள் ஆகியவை இதில் அடங்கும்.

1850ஆம் ஆண்டு முதல் 21ஆம் நூற்றாண்டின் இறுதி வரையிலான காலத்தில் பூமியின் தரைப்பகுதி வெப்பநிலை உயர்வு 1.5 டிகிரி செல்சியஸை தாண்டும் என்றே பெரும்பாலான பாவனையாக்கல் முடிவுகள் தெரிவிக்கின்றன.

தற்போது நிலவி வரும் சூழ்நிலை தொடரும் பட்சத்தில், இந்த நூற்றாண்டின் இறுதிக்குள்ளேயே வெப்பநிலை 3-5 செல்சியஸ் அதிகரிக்கக் கூடும் என்று உலக வானிலை ஆய்வு மையம் தெரிவிக்கிறது.

பூமியின் வெப்பநிலை 2 டிகிரி செல்சியஸ் அதிகரிப்பது மிகவும் அபாயகரமான விளைவுகளை ஏற்படுத்தக் கூடும் என்று நீண்டகாலமாக கூறப்பட்டு வரும் நிலையில், தற்போது அதை 1.5 டிகிரி செல்சியசுக்குள் கட்டுப்படுத்துவதே பாதுகாப்பான நடவடிக்கையாக இருக்கும் என்று விஞ்ஞானிகளும், கொள்கை வகுப்பாளர்களும் தெரிவிக்கின்றனர்.

# நலன்புரி பொருளாதாரம் என்றால் என்ன?

நலன்புரி பொருளாதாரம் என்பது வளங்கள் மற்றும் பொருட்களின் ஒதுக்கீடு சமூக நலனைஎவ்வாறு பாதிக்கிறது என்பதைப் பற்றிய ஆய்வு ஆகும் . இது நேரடியாக பொருளாதார செயல்திறன் மற்றும் வருமானப் பகிர்வு பற்றிய ஆய்வுடன் தொடர்புடையது , அத்துடன் இந்த இரண்டு காரணிகளும் பொருளாதாரத்தில் உள்ள மக்களின் ஒட்டுமொத்த நல்வாழ்வை எவ்வாறு பாதிக்கிறது.

நடைமுறையில், பொதுநலப் பொருளாதார வல்லுநர்கள் சமூகம் அனைத்திற்கும் நன்மை பயக்கும் சமூக மற்றும் பொருளாதார விளைவுகளை அடைய பொதுக் கொள்கைக்கு வழிகாட்டும் கருவிகளை வழங்க முற்படுகின்றனர். எவ்வாறாயினும், நலன்புரி பொருளாதாரம் என்பது ஒரு அகநிலை ஆய்வு ஆகும், இது தனிநபர்கள் மற்றும் சமூகம் முழுவதும் நலன்களை எவ்வாறு வரையறுக்கலாம், அளவிடலாம் மற்றும் ஒப்பிடலாம் என்பது பற்றிய தேர்ந்தெடுக்கப்பட்ட அனுமானங்களை பெரிதும் சார்ந்துள்ளது .

முக்கிய எடுக்கப்பட்டவை

- நலன்புரி பொருளாதாரம் என்பது சந்தைகளின் கட்டமைப்பு மற்றும் பொருளாதார பொருட்கள் மற்றும் வளங்களின் ஒதுக்கீடு ஆகியவை சமூகத்தின்ஒட்டுமொத்த நல்வாழ்வை எவ்வாறு தீர்மானிக்கிறது என்பதைப் பற்றிய ஆய்வு ஆகும்.
- நலன்புரி பொருளாதாரம் பொருளாதாரத்தில் ஏற்படும் மாற்றங்களின் செலவுகள் மற்றும் நன்மைகளை மதிப்பிட முயல்கிறது மற்றும் செலவு-பயன் பகுப்பாய்வு மற்றும் சமூக நலச் செயல்பாடுகள் போன்ற கருவிகளைப் பயன்படுத்தி, சமூகத்தின் மொத்த நன்மையை அதிகரிப்பதற்கு பொதுக் கொள்கையை வழிநடத்துகிறது.
- நலன்புரி பொருளாதாரம், தனிநபர்கள் மற்றும் நல்வாழ்வு பற்றிய பிற நெறிமுறை மற்றும் தத்துவக் கருத்துகளின் மதிப்பு ஆகியவற்றின் அளவீடு மற்றும் ஒப்பீட்டுத் தன்மை பற்றிய அனுமானங்களை பெரிதும் சார்ந்துள்ளது.

### நலன்புரி பொருளாதாரத்தைப் புரிந்துகொள்வது

நலன்புரி பொருளாதாரம் நுண்ணிய பொருளாதாரத்தில் பயன்பாட்டுக் கோட்பாட்டின் பயன்பாட்டுடன்தொடங்குகிறது. பயன்பாடுஎன்பது ஒரு குறிப்பிட்ட பொருள் அல்லது சேவையுடன் தொடர்புடைய உணரப்பட்ட மதிப்பைக் குறிக்கிறது. பிரதான நுண்பொருளாதாரக் கோட்பாட்டில், தனிநபர்கள் தங்கள் செயல்கள் மற்றும் நுகர்வுத் தேர்வுகள் மூலம் தங்கள் பயன்பாட்டை அதிகரிக்க முற்படுகின்றனர், மேலும்போட்டிச்சந்தைகளில்வழங்கல்மற்றும் தேவையின் சட்டங்கள் மூலம் வாங்குபவர்கள் மற்றும் விற்பனையாளர்களின் தொடர்புகள் நுகர்வோர் மற்றும் உற்பத்தியாளர் உபரியை அளிக்கின்றன .

வெவ்வேறு சந்தை கட்டமைப்புகள் மற்றும் நிலைமைகளின் கீழ் சந்தைகளில் நுகர்வோர் மற்றும் உற்பத்தியாளர் உபரிகளின் நுண் பொருளாதார ஒப்பீடு, நலன்புரி பொருளாதாரத்தின் அடிப்படை பதிப்பாக அமைகிறது. நலன்புரி பொருளாதாரத்தின் எளிமையான பதிப்பு, "எந்தச் சந்தை கட்டமைப்புகள் மற்றும் தனிநபர்கள் மற்றும் உற்பத்தி செயல்முறைகள் முழுவதும் பொருளாதார வளங்களின் ஏற்பாடுகள் அனைத்து தனிநபர்களாலும் பெறப்பட்ட மொத்தப் பயன்பாட்டை அதிகரிக்கும் அல்லது அனைத்து சந்தைகளிலும் மொத்த நுகர்வோர் மற்றும் உற்பத்தியாளர் உபரியை அதிகரிக்கும். ?" நலன்புரி பொருளாதாரம் அதன் உறுப்பினர்களிடையே சமூக திருப்தியின் மிக உயர்ந்த நிலையை உருவாக்கும் பொருளாதார நிலையை நாடுகிறது.

### பரேட்டோ செயல்திறன்

இந்த நுண்பொருளாதார பகுப்பாய்வு , நலன்புரி பொருளாதாரத்தில் ஒரு இலட்சியமாக பரேட்டோ செயல்திறன்நிலைக்கு வழிவகுக்கிறது . பொருளாதாரம்பரேட்டோ செயல்திறன் நிலையில் இருக்கும்போது , குறைந்தபட்சம் ஒரு தனிநபரை மோசமாக்காமல் ஒரு தனிநபரை மேம்படுத்துவதற்கு எந்த வளங்களையும் மறுஒதுக்கீடு செய்ய முடியாது என்ற பொருளில் சமூக நலன் அதிகரிக்கப்படுகிறது. பொருளாதாரக் கொள்கையின் ஒரு குறிக்கோள், பொருளாதாரத்தை ஒரு பரேட்டோ திறமையான நிலையை நோக்கி நகர்த்த முயற்சிப்பதாகும்.1

சந்தை நிலைமைகள் அல்லது பொதுக் கொள்கையில் முன்மொழியப்பட்ட மாற்றம் பொருளாதாரத்தை பரேட்டோ செயல்திறனை நோக்கி நகர்த்துமா என்பதை மதிப்பிடுவதற்கு, பொருளாதார வல்லுநர்கள் பல்வேறு அளவுகோல்களை உருவாக்கியுள்ளனர், இது பொருளாதாரத்தில் ஏற்படும் மாற்றத்தின் நலன் சார்ந்த ஆதாயங்கள் இழப்புகளை விட அதிகமாக உள்ளதா என்று மதிப்பிடுகிறது. இதில் ஹிக்ஸ் அளவுகோல், கால்டோர் அளவுகோல், ஸ்கிடோவ்ஸ்கி அளவுகோல் (கல்டோர்-ஹிக்ஸ் அளவுகோல் என்றும் அழைக்கப்படுகிறது) மற்றும்புக்கானன்ஒருமித்த கொள்கை ஆகியவை அடங்கும் .

பொதுவாக, இந்த வகையான செலவு-பயன் பகுப்பாய்வு, பயன்பாட்டு ஆதாயங்கள் மற்றும் இழப்புகள் பண அடிப்படையில் வெளிப்படுத்தப்படலாம் என்று கருதுகிறது. இது சமபங்கு பிரச்சினைகளை (மனித உரிமைகள், தனியார் சொத்து, நீதி மற்றும் நியாயம் போன்றவை) கேள்விக்கு முற்றிலும் புறம்பாகக் கருதுகிறது அல்லது இந்த வகையான சிக்கல்களில் ஒருவித இலட்சியத்தை நிலைநிறுத்துகிறது என்று கருதுகிறது.

### சமூக நலன் அதிகப்படுத்துதல்

எவ்வாறாயினும், பொருளாதாரம் எவ்வாறு ஒழுங்கமைக்கப்பட வேண்டும் என்பதற்கான தனித்துவமான தீர்வை பரேட்டோ செயல்திறன் வழங்கவில்லை. செல்வம், வருமானம் மற்றும் உற்பத்தி ஆகியவற்றின் விநியோகத்தின் பல பரேட்டோ திறமையான ஏற்பாடுகள் சாத்தியமாகும். பொருளாதாரத்தை பரேட்டோ செயல்திறனை நோக்கி நகர்த்துவது சமூக நலனில் ஒட்டுமொத்த முன்னேற்றமாக இருக்கலாம், ஆனால் தனிநபர்கள் மற்றும் சந்தைகளில் பொருளாதார வளங்களின் ஏற்பாடு உண்மையில் சமூக நலனை அதிகப்படுத்தும் என்பதற்கு இது ஒரு குறிப்பிட்ட இலக்கை வழங்கவில்லை.

இதைச் செய்ய, நலன்புரி பொருளாதார வல்லுநர்கள் பல்வேறு வகையான சமூக நல செயல்பாடுகளை வகுத்துள்ளனர். இந்த செயல்பாடுகளின் மதிப்பை அதிகரிப்பது சந்தைகள் மற்றும் பொதுக் கொள்கையின் நலன்புரி பொருளாதார பகுப்பாய்வின் இலக்காகிறது.

இந்த வகையான சமூக நலப் பகுப்பாய்வின் முடிவுகள், தனிநபர்களுக்கிடையில்பயன்பாட்டை எவ்வாறு சேர்க்கலாம் அல்லது ஒப்பிடலாம் என்பது பற்றிய அனுமானங்களையும், வெவ்வேறு தனிநபர்களின் நல்வாழ்வில் வைக்க வேண்டிய மதிப்பு பற்றிய தத்துவ மற்றும் நெறிமுறை அனுமானங்களையும் பெரிதும் சார்ந்துள்ளது. இவை சமூக நலன் பற்றிய பகுப்பாய்வில் நியாயம், நீதி மற்றும் உரிமைகள் பற்றிய கருத்துக்களை அறிமுகப்படுத்த அனுமதிக்கின்றன, ஆனால் நலன்புரி பொருளாதாரத்தை இயல்பாகவே அகநிலை மற்றும் சாத்தியமான சர்ச்சைக்குரிய துறையாக மாற்றுகின்றன.

பரேட்டோ செயல்திறன், உகந்த நலன் அல்லது பயன்பாடு ஆகியவற்றின் கீழ், கொடுக்கப்பட்ட பொருள் அல்லது சேவைக்கான சமநிலைவிலையை அடைய சந்தை அனுமதிக்கப்படும்போது அடையப்படுகிறது- இந்த கட்டத்தில்தான் நுகர்வோர் மற்றும் உற்பத்தியாளர் உபரிகள் அதிகரிக்கப்படுகின்றன.1

# மருதம் பசுமை நகர்
## Marutham Green City

வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்




A – 2 பரப்பு மேட்டுக்காணியுடன் 2 பரப்பு வயல்க்காணி

B – 2 பரப்பு மேட்டுக்காணியும் 2 பரப்பு வயல்க்காணியும் (தனிதனியாக)

C – 2 பரப்பு மேட்டுக்காணி பிரதான வீதியுடன்

நல்லூர் ஆலயம் 9km
கச்சேரி 8km
யாழ் பேருந்து நிலையம் 11km
யாழ் புகையிரதநிலையம் 10km
வடக்கு மாகாணசபை 9km

## உள்ளக வசதிகள்

- நூலகம்
- நீச்சல் தடாகம்
- உணவகம்
- சிறுவர் பூங்கா
- விளையாட்டுத்திடல்
- மீன்பிடி குளம்

**0777 43 55 57**

இவ் வாரஇதழ் நல்லூர், No.68, Crossette lane, யாழ்ப்பாணத்திலுள்ள Green Media House (Pvt) Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 01.12.2024இல் வெளியிடப்பெற்றது.